# கிராமநலம்




முதல் பரிசு பெற்ற
ஊர்ப்பணியாளர்

ஆகஸ்ட் 1968

சிறப்புக்கட்டுரை


திருச்சி வானொலி
விவசாயக் கவியரங்கம்



# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 ஆகஸ்ட் 1968 நெல் 11





(மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி)

[நல்லேர் உழவர், வானொலி வாயிலாக, "சொல்லேர் உழவராகி" குடந்தையில் 13—8—1968 அன்று நடைபெற்ற கவியரங்கில் பங்குகொண்டதைப் பாராட்டும் பா.]

(அறுசுவை அகவல்)

"அறுசுவை கொண்டது அருந்தமிழ் விருந்து;
ஆர்வம் மிகுந்த அன்பர் உலகம்,
இன்முகம் பொலிய, இதயம் களித்தெழ,
ஈன்றோர் சான்றோர் ஆன்றோர் அனைவரும்,
உயர்ரக மணி விதை ஊட்டும் வளத்தை
ஊரார் உணர உயர்கவி கேட்டோம்.
எழில் நிறை வானொலி என்றும் வாழ்க
ஏர்த் தொழில் வல்லார் எதிலும் வல்லார்.
ஐயம் இல்லை : அறிக இவ்வையம்
ஒப்புமை யில்லா உயர்விதை ஆறும்
ஓங்கி, விளைச்சல் உயர்ந்திடச் சிறந்து
ஔவை புகழ்போல் வளர்க! தழைக்க!!"

[மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் இக் கவிதையை, அமைச்சர் அவர்கள் அச்சமயம் வெளிநாட்டிலிருந்ததால், கவியரங்கில், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் திரு ஜி. திருமால் அவர்கள் வாசித்தளித்தார்.]

எதிர்ப்புறம் அட்டையில் (மேலே) குடந்தையில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி அன்று நடைபெற்ற விவசாயக் கவியரங்கத்தையும், (கீழே) முதற் பரிசு பெற்ற ஆறு விவசாயக் கவிஞர்களையும் காணலாம். [முதல் அட்டைப்படம் : சிறப்புக் கட்டுரை—12-ம் பக்கம்]

சுதந்திரத் திருநாளான ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த செய்தியின் முழு விவரம் வருமாறு:—

# எதிர்காலத்தின் பொன்னொளி

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

"இன்று சுதந்திரத் திருநாள்—ஆகஸ்டு 15—அடிமைத் தளைகள் அறுபட்ட நாள்—ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்ற நாள்—நம்மை நாமே ஆண்டு கொள்ளும் உரிமையினைப் பெற்ற நாள்—வெற்றித் திருநாள்—விழா நாள் !

இந்தியா, பிரிட்டிஷ் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட நாளை—சுதந்தரம் பெற்ற நாளை—ஒவ்வோர் ஆண்டும் விழாவாக்கி மகிழ்கிறோம்!

பெருமித நிலை....

உலகிலே உள்ள பல்வேறு நாடுகளும், சுதந்திரத் திருநாளின் போது, நமக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கி மகிழ்கின்றன.

அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளின் பட்டியலிலே இருந்து வந்த இந்தியா, உலக அரங்கிலே சுதந்திரம் பெற்ற நாடுகளின் வரிசையிலே பெருமிதத்துடன் வீற்றிருக்கும் நிலையைப் பெற்றுத் தந்த நாளே, 1947 ஆகஸ்டு பதினைந்து.

நாட்டுக்கான புதிய வரலாற்றை பொன் எழுத்துக்களால் எழுதத் துவங்கிய அந்த ஆகஸ்டு 15—ஒவ்வோர் ஆண்டும் நாட்டுக்குத் திருநாளாகிறது.

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட-வாழ்த்தும் வணக்கமும் கூறிட—உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட—சுருக்கமாகக் கூறுவதனால், பெற்ற சுதந்திரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கி கொள்ள—சுதந்திரத்தின் முழுப் பயனை நாட்டவர் அனைவரும் பெற்றிட—அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே இந்த ஆகஸ்டு பதினைந்து.

வீரம்—வெற்றியைத் தந்தது: தியாகம்-சுதந்திரத்தை தந்தது: வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை : அதிலும் உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த அறநெறி நின்று இந்தியா பெற்ற சுதந்திரம் உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையானதாகும்.

'இந்தியா விடுதலை பெற வேண்டும்' என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தவர்களிலேயே



கோட்டையில் சுதந்திர தின அணிவகுப்பு (15-8-68)

பலரும், இங்கும் சரி—வேறு நாடுகளிலும் சரி— 'காந்தியடிகளின் போர்முறைபலன் தரும்' என்ற நம்பிக்கையைப் பெற்றிட முடிய வில்லை—துவக்கத்தில். ஆனால், ஆண்டுகள் செலலச் செல்ல, விடுதலை பெற்றாக வேண்டும் என்ற ஆர்வமும் எழுச்சியும், 'அதற்காக எந்தத் தியாகமும் மேற்கொள்வோம்' என்ற காலத்தின் புகழ் ஒளி கண்களுக்குத் தெரிவது மட்டுமல்ல—இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை—இன்னல்களை நாம் தீர்த்துக் கொள்ளத்தக்க ஆற்றலைப் பெற்றிட முடியும், பெற்றுக்கொள்வோம் என்ற உறுதியையும் அந்த உறுதி வழி நின்று பணியாற்றி நாட்டினைப் புன்னகைப் பூக்கோட்டமாக்கிட முடியும்

## விடுதலை நாள் விழா

உறுதியும் படித்தோரிடம் மட்டுமல்ல—பாமரர் என்று கூறப்படுவோரிடமும் எழுந்தது, ஏகாதிபத்தியம் தகர்ந்தது.

### அண்ணல் காட்டிய பாதை

இன்று அண்ணலுக்கும் அவர் காட்டிய பாதை நின்று அறப்போர் நடாத்தி—இன்னுயிரை



இழந்து.... .தியாக பூமியாக இந்நாட்டை மாற்றி அமைத்தோருக்கும் நாட்டு மக்கள் அஞ்சலி செய்வது முறை—கடமை.

என்ற திடமான எண்ணமும் தோன்றி எதிர் காலத்துப்பொன்னொளியும் நமது கண்களுக்குத் தெரிந்திடக்கூடிய நாள் ஆகஸ்டு பதினைந்து:

இன்று இலண்டனிலும், மாஸ்கோவிலும், வாஷிங்டனிலும், டோக்கியோவிலும், பெர்லின் பாரீஸ், ரோம் போன்ற தலை நகர்களிலெல்லாம், 'இந்தியா மிகப்பெரிய நாடு, பன்னெடுங் காலம் அடிமைப்பட்டுக்கிடந்தது: இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்பே விடுதலை பெற்றது. இன்று அங்கு சுதந்திரநாள் விழா' என்று பேசுவர் முகமலர்ச்சியுடன் :

### அன்றும் இன்றும்

முன்பு அடிமைப்பட்டுக் கிடந்தபோது :

"ஐயோ பாவம்" என்ற முறையிலும், 'அவர்களால் என்ன ஆகும்?' என்ற முறையிலும் "இந்தியாவா! அங்கு மக்கள் 'அஞ்சி அஞ்சிச் சாவார் : அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்ற விதமாகவும் இந்தியாவைப் பற்றிப் பேசினர்.

இன்று ? விடுதலை பெற்று—புதுவாழ்வு பெற்று—இந்தியா இன்று ஒளிமையமான எதிர்காலத்தைப் பெற்றிடும் உறுதியுடன் விளங்குகிறது என்று பாராட்டியும் வாழ்த்தியும் பேசுகின்றனர்.

## மாண்புமிகு முதலமைச்சரின் பேருரை

'அத்தகையோரின் வழிவழி வந்துள்ளோம்' என்று நினைவுபடுத்திக்கொள்வதும் எழுச்சி பெற்றிடத் தேவை :

வல்லமைமிக்க ஓர் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடும் ஆற்றலைப் பெற்றிட முடிந்தது என்று எண்ணும்போது, கடந்த

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியிலே நாடு இருந்ததாலே விளைந்த கேடுகள் யாவை ? —வறுமை : அறியாமை, சமூகத்தில் சோர்வு, தன்னம்பிக்கையற்ற நிலை, திகைப்பு, தடுமாற்றம், இயற்கை வளத்தையும் பயன்படுத்த முடியாத நிலைமை, உரிமையற்ற நிலைமை.

இத்தனை கேடுகளுக்கும் காரணம்? இந்திய மக்கள் அறிவாற்றலற்றவர்கள் என்பது அல்ல: அவர்கள் அடிமைத்தனத்திலே சிக்கிக்கொண்டதுதான் என்பதனை உலகப்பேரறிவாளர் உணர்ந்தனர்: எடுத்துரைத்தனர்: சுதந்திர இந்தியா இந்தக் கேடுகளற்ற நாடாகத் திகழ முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

வோம்—எந்த அளவு நமது நோக்கம் ஈடேறியிருக்கிறது....வாழ்வும் வளமும் சமூகத்தில் எந்த அளவு பரவியிருக்கிறது—என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்ளத் தானேவேண்டும்? கணக்கு பார்த்துக்கொள்ளத்தானே வேண்டும்: ஆகஸ்டு 15 அத்தகைய கணக்குப் பார்க்கும் நாள்.

## கணக்குப் பார்க்கும் நாள்

சுதந்திரம் கிடைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேல் உருண்டோடிவிட்டன. இனி இங்கு இன்னும் இழிவும் வறுமையும் அறியாமையும் சமூகத்தில் சோர்வும், சரண்டல் முறையும் இருந்திடின், உலகு, 'இதற்குக் காரணம் ஏகாதிபத்தியம்' என்று எங்ஙனம் கூறும்?

நம்மை நாமே அல்லவா ஆளுகின்றோம்? நமது வாழ்வை அமைத்துக்கொள்ளும் பொறுப்பும் உரிமையும் நம்மிடமே அல்லவா இருக்கிறது? பிறர் எவருடைய கட்டளைக்கும் காத்திருக்கவேண்டிய நிலையா இன்று?—இல்லையே! எனவே உலகு கேட்கிறது? கேட்கத்தானே செய்யும். உலகு என்ன? நம்முடைய உள்ளமே கூடக் கேட்கத்தானே செய்கிறது. • சுதந்திர நாடு ஆனபிறகு நாட்டின் வளமும் வாழ்வும் எந்த அளவு பெருகி உள்ளன? 'சாமான்யர்கள்' என்ற பட்டியலிலே அடைப்பட்டுவிட்டிருக்கும் கோடிக்கணக்கான ஏழை எளியோர், உழவர், தொழிலாளர் எத்தகைய புதுவாழ்வை பெற்றுள்ளனர்' என்ற கேள்விஎழாமலிருக்க முடியுமா?

வளம் ஒருபுறம்: வறுமை மறுபக்கம்

அந்நியர் ஆண்டபோதே, 'இன்னல் துடைக்கப்படவேண்டும். வாழ்வு வளம் பெற வேண்டும்' என்று கேட்டோமே? அந்த நிலை

காண்கின்றோம்—கைகட்டி வாய் பொத்தி நின்றிருந்த நிலை இல்லை. எங்கும் நம்மவர்களே அரசோச்சுகின்றனர்! எழில் மாடக் கூடங்கள், தொழிற் சாலைகள், அறிவாலயங்கள், மருத்துவமனைகள், புதிய பாதைகள், பாங்கான பணிமனைகள் எழுப்பியுள்ளனர்! உற்பத்திப்




பெருகி, நாட்டுப் பொதுச் செல்வம் வளருவது தெரிகிறது.

ஆனால் இவைகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்போதே, பிறிதோர் புறம் சேரிகள், சகதி நிறை இடங்கள்—கூரைகள்—குமுறிக்கிடக்கும் மக்கள், வேலையில்லாதார் தொகை நெளிந்

## வாழ்வில் வளம் பெற்றோமா?

யைப் பெற்றளித்திட உன்னால்முடியாது: உனக்கு மனமும் எழாது என்றுரைத்தோமே—நம்மை நாமே ஆண்டால் மட்டுமே நல்ல நிலை நாட்டுக்கு ஏற்பட முடியும் என்று கூறி, ஏகாதிபத்தியத்தை விரட்டினோமே, இன்று நம்மை நாமே ஆண்டுகொள்ளும் வாய்ப்பினை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பெற்றுள்

திடக்காண்கிறோம். பாதைகளையும் பள்ளங்களையும் பாங்கான மாளிகைகளையும் சிங்காரத் தோட்டங்களையும் வெள்ளையர்கூட அமைத்தனர்—ஓரளவு. ஆனால் இவை பளபளப்பூட்டும் முறை, புண்ணுக்குப் புனுகுபூசும் வழி, மன மயக்கத்தைத் தருவதாகச் செய்யப்படுவது.

[23-ம் பக்கம் பார்க்கவும்]




### காந்தியடிகள் நாட்காட்டி

இரா. நெடுஞ்செழியன், எம. ஏ,
கல்வி-தொழில் அமைச்சர்

காந்தி நூற்றாண்டு விழா
மாநிலக் குழு அலுவலகம்,
கோட்டை, சென்னை-9.

பேரன்புடையீர்,

வணக்கம். காந்தியடிகள் நூற்றாண்டு விழா, இந்த ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளிலிருந்து, 1969 அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் வரை நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட இருக்கின்றது. சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் மிக்க ஆர்வத்தோடும் எழுச்சியோடும் பங்குகொண்டு, காந்தியடிகளுக்கு நன்றிக் கடன் செலுத்தும் இச்சீரிய நிகழ்ச்சியில், வணிகப் பெருமக்களும் தொழிலதிபர்களும் சிறப்பாகப் பணியாற்ற முன்வருமாறு நான் அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் விடுதலைக்குப் பிறகு மலர்ந்துள்ள இளந் தலைமுறையினர் காந்தியடிகளை நேரிற கண்டு மகிழும் பேறு பெறவில்லை. அவரது அறிவுரைகளையும் அறவுரைகளையும் நூல்கள் வாயிலாக அறிந்தே அவரது உள்ளத்தைப் புரிந்து கொண்டு அவர்பால் அன்பும் மதிப்பும் வைத்துள்ளனர். இத்தகைய இளந் தலைமுறையினரின் உள்ளத்தில் காநதியடிகளின் திருவுருவமும், கொள்கை முழக்கமும் இடம் பெறுகின்றவகையில், அழகிய காலண்டர்களை வெளியிட்டு உதவுமாறு, தங்களை அன்புடன வேண்டுகின்றேன்.

இயற்கை எழில குலுங்கும் காட்சிகளும், நாட்டின் பொருளாதார, சமூக முன்னேற்றங்களை ஓவியமாகக் காட்டும் காட்சிகளும் இடம் பெற்ற காலண்டர்கள் ஒவ்வோர் ஆண்டு ஏராளமாக வெளி வநத வணணம் இருக்கின்றன இநத ஆண்டில் இப்படி ஒரு புதுமை செய்வது. காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

பச்சிளங் குழநதைக்கும் காந்தியடிகள் என்று புரியக்கூடிய அவரது பலவிதப் படங்கள் இருக்கின்றன அவர் ஆழ்ந்து சிந்தித்து அரிய கருத்துக்களைத தெரிவிக்காத துறையே இல்லை. இவற்றைப பயன்படுத்திக் கொண்டு, காந்தியடிகள் பற்றிய எழிலும எண்ணச் செறிவும் நிறைந்த காலண்டர்களை உருவாக்குவது கடினமாக இராது. தாங்கள் இவ்வகையில் சிந்தித்துச் செயல்பட்டு. காந்தி நூற்றாண்டு விழாக் குழுவினருக்கு உறுதுணையாக நின்று, நூற்றாண்டு விழா மிகப் பொலிவோடு தமிழகத்தில் கொண்டாடப்பட, 1969-ம் ஆண்டில் 'காந்தியடிகள் காலண்டர்கள்' வெளியிட்டுத் தங்கள் கடமையினை நிறைவேற்ற முன் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்

தங்களன்புள்ள,

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-தொழில் அமைச்சர்

# உயிர்த் துடிப்புள்ள சக்தியின் ஊற்று!

**VOLTAS**

மெக்கார்மிக்

# இன்டர்நேஷனல் டிராக்டர் B-275

## பயிர்வளம் பெருகித் தழைத்தோங்கவே

அபார இழுதிறனைத் தரவல்லதாய், தேவைக்கேற்ப ஆக்கம்பெறும், ஆற்றல் மிகுந்த 35 ஹெச். பி. டீஸல் என்ஜினை உடையது இந்த டிராக்டர். எல்லா நிலைகளிலும் இயங்கி எத்தகைய பண்ணை வேலைக்கும் ஏற்றபடி உதவுமாறு உருவாக்கப்பட்டுள்ளது, இழுவை வேலைகளுக்குப் பொருத்தமானது.

எடுப்பான சிறப்பியல்புகள் :

- 4 ஸிலிண்டர் ஹெவி டியூட்டி IH என்ஜின்
- வெப்பநிலைக்குரிய ரேடியேட்டர்
- சீரான இடைவெளிகளோடு அமைந்த பத்து வேகநிலைகள்
- டிபரன்ஷியல் லாக்
- தன்னூக்குவிப்புள்ள டிஸ்க் பிரேக்குகள்
- ஊக்கமுள்ள நீரியல் தகுதி
- இணைபொருந்தும் பண்ணைச் சாதனங்கள்.

INTERNATIONAL TRACTOR

—தரத்திற்கும் சேவைக்கும் ஒரு சர்வதேசச் சின்னம்

தயாரிப்பாளர்கள் .

**இன்டர்நேஷனல் டிராக்டர் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.**

ஏகபோக வினியோகஸ்தர்கள்:

**வால்டாஸ் லிமிடெட்**

அக்ரோ-இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்.

150-B, மவுண்டு ரோடு,
சென்னை-2.





2-சக்கர டிரெயிலர்



தண்டு முனை மவுல்டுபோர்டு கலப்பை



ஆஃப்ஸெட் சட்டிக் கலப்பை

PS/IT/IA/68 TAM



கொத்துக்கலப்பை

# நமக்குத் தொழில் உழவு

(குடந்தை திரு எஸ். பி. தியாகராஜன், எம். ஏ.)

"பார் முழுதும் ஏர்முனையிலே" என்று உழவர் பெருமக்கள் பாட்டிலே கொண்டாட்டம் போடுவது பழமையான காட்சியாக இருக்கலாம். ஆனல் உயர் வளரக உணவுப் பயிர்கள் பற்றி தாளாண்மை மிக்க வேளாண்மைப் பெருமக்கள் தம் தம் அனுபவத்தை கவிதையாக்கி, அரங்கேற்ற வைத்த திருச்சி வானொலி நிலையத்தினரின் சீரிய பணி புதுமையானது—இந்தியா முழுமைக்கும் புதுமையான காட்சி தான். அப்புதுமைக் காட்சியினைக் கண்டு, கேட்டு மசிழ்ந்த கட்டுரையாசிரியர், புகழ்மிக்க, சுவையான நிகழ்ச்சிகளை, கண்கொள்ளாக் காட்சிகளை கட்டுரையாக்கித் தருகிருர், சுவை குன்ருமல்.

—ஆசிரியர்]

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல்' என்ற அமரகவி பாரதியாரின் கவிதை வரிகளை மாற்றி நமக்குத் தொழில் உழவு, நாட்டுக்குழைத்தல் என்று ஆறு கவிஞர்கள் இல்லை, உழவர் பெருங் குடியினர் குடந்தைக் கவியரங்கில் நிரூபித்தனர்.

1968 ஆகஸ்ட் மாதம் 13-ம் நாளன்று குடந்தை மூர்த்தி கலையரங்கில் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு கருணநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், நல்லேர் உழவர்கள், சொல்லேர் உழவர்களாகக் காட்சி அளித்தனர்.

திருச்சி வானெலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் வேளாண்மை நிகழ்ச்சிகளின் இரண்டு ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற இக் கவியரங்கம் புதுமையானது.

தலைப்பு—புதிய பாதை.

பொருள்--உயர் வள ரகப் பயிர்களைப் பற்றியது. அதாவது (1) ஆடுதுறை 27 நெல், (2) ஐ. ஆர் 8 நெல் (3) சி. எஸ். எச். 1 சோளம் (4) எச். பி. 1 கம்பு (5) வீரிய ஒட்டு மக்காச் சோளம் (6) கோ. 7 ராகி ஆகிய உயர் விளைச்சல் தானியங்களைப் பற்றியதாகும்.

இக்கவியரங்கத்தில் கலந்து கொள்ளும்படி மாநிலம் முழுவதுமுள்ள புலமைப் படைத்த விவசாயப் பெருங்குடி மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

முதலில் வட்டார அளவில் விவசாயக் கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் மாவட்ட அளவில் ஒவ்வொரு ரக தானியத்திற்கும் ஒரு கவிஞராக ஆறு சிறந்த கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் கவிஞர்களிலிருந்து மாநில அளவில் ஆறு சிறந்த கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அந்த ஆறு விவசாயக் கவிஞர்களும் தங்கள் கவிதைகளை குடந்தை கவியரங்கில் அரங்கேற்றினர். சிறந்த விவசாயக் கவிஞர் என்பதற்கான சான்றிதழும் டிரான்ஸிஸ்டரும், பூச்சி மருந்து தெளிப்பானும் அந்த ஆறு கவிஞர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் அளித்தார்கள்.

திருச்சி மாவட்டம் காரைக்குறிச்சியைச் சேர்ந்த திரு கரும்பாயிரம் அவர்கள் ஆடுதுறை 27 நெல் பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

தர்மபுரி மாவட்டம் மூக்கனூர்ப்பட்டியைச் சேர்ந்த திரு இரா கண்ணிமை ஐ. ஆர். எட்டு நெல்லைப் பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

சேலம் மாவட்டம் சின்னகரசபாளையம் ஊரைச் சேர்ந்த திரு மூவேந்தன் என்கிற தமிழரசு அவர்கள் வீரிய ஒட்டுச் சோளம் பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

வட ஆர்க்காடு மாவட்டம் கம்மவான்பேட்டை திரு கே. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் எச். பி. 1 வீரிய கம்புப் பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

கோவை மாவட்டம் குனியமுத்தூரைச் சேர்ந்த திரு நஞ்சப்பா வீரிய ஒட்டு மக்காச் சோளம் பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

மதுரை மாவட்டம் தாமரைக் குளத்தைச் சேர்ந்த திரு ப. செல்லபாண்டியன் அவர்கள் கோ–7 ராகி பற்றிய கவிதையை அரங்கேற்றினர்.

விழாவின் தொடக்கத்திலே வரவேற்புரை வழங்கிய திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்களின் வரவேற்புரையே கவிதை வடிவில் இருந்தது. கவிதைகளை தேர்ந்தெடுத்த முறைகளை எல்லாம் கவிதை வடிவில் ஆக்கித் தந்தார்.

"அரங்கிலுள்ளார் அவைதந்த கவிஞர் ஏறு
தீட்டுகின்ற திட்டமெல்லாம் திறம்படவே செயலாற்ற
காட்டுகின்ற புதியபாதை வழியே சென்றிடுவோம்
ஊட்டந்தரும் உணவு பயிர் விளைச்சல் செய்திடுவோம்
வாட்டமின்றி வாழ்வதற்கு வழிகாண வேண்டுமெனில்
நாட்டமுடன் வேளாண்மை நன்முறையில் செய்திடுவோம்"

என்ற வானொலி நிலைய இயக்குநரின் கவிதை வரிகள் செவிக்குமட்டும் உணவில்லை; நம் நினைவுக்கும் நெஞ்சுக்கும் நீதியாகவும்-நியதியாகவும் அமைந்தன.



மாநில அளவில் கவியரங்கில் பங்குகொண்ட சிறந்த விவசாயக் கவிஞர்களுக்கு மாண்புமிகு விவசாய அமைச்சர் பரிசளித்தார்.

நெல்லென்றும் வரகென்றும்
கம்பென்றும் கரும்பென்றும்
உளுந்தென்றும் பருப்பென்றும்
எள்ளென்றும் கொள்ளென்றும்
உணவு பெருக்கிடுவீர்—உற்பத்தி செய்
திடுவீர்''

என்ற கவிதை வரிகள் நகைச்சுவையோடு நல்ல கருத்துக்களை அழகாக வலியுறுத்து கின்றன. பொதுப்பணி அமைச்சர் அவர்கள் பரிசுபெற்ற கவிஞரை அழைத்து—

''காடுகமழ் நீடுபுகழ்
பீடுமிக நாடுநிதம்
பாடுபட வீடுநிறை
ஆடுதுறை இருபத்தேழு''

என்று கூறிய விதம் மிகச் சிறப்பாக இருந்தது.

### புதிய முயற்சி

விவசாயக் கவிஞர்கள் உயர் வள ரகப் பயிர்களைப் பயிரிடும் முறைகளை கவிதை வடிவில் தந்தார்கள். வேளாண்மை உலகுக்கு இது புது முயற்சி. இந்தியா முழுவதற்கும் வழிகாட்டும் திட்டம்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கருணாநிதி அவர்களின் தலைமை உரையைப்பற்றி சொல்லவா வேண்டும்? தாம் கலைஞர் மட்டுமல்ல; கவிஞர்கூட என்பதை நிலை நாட்டினர்.

பரிசுபெற்ற கவிஞர்களில் உழவுத் தொழிலில் உயரிய இடம்பெற்றிருக்கும் தஞ்சைத் தரணியைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட இல்லை என்ற குறையை பொதுப்பணி அமைச்சர் அவர்கள் தமது கவிதைகளால் போக்கிவிட்டார்.

கற்பனையழகும் கலைநயமுமிக்க அமைச்சரின் கவிதையில் தமிழகத்தின் ஆறுகளை வரிசைப்படுத்தி ஒரு சிறு கதை கூறிய அழகே அழகு.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பதை விளக்கிட உழவனோர் தாமரை என்றும், உழவனோர் மன்னன் என்றும், உழவனோர் வீரன் என்றும், உழவனோர் ஓவியன் என்றும், உழவனோர் தெய்வம் என்றும் அமைச்சர் விளக்கிய நயம், அவரது கவிதைத் திறனுக்கும் அறிவாற்றலுக்கும் சீரிய எடுத்துக்காட்டு.

''பின் நிலையில் இருந்திட்டோம் பலநாளாய் உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம் கொள்வோம்
அந்நிலை எய்திட
முன்னிலை நிற்கும் நம் அரசு
நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால்—அதைவிடுத்து
வீட்டினிலே உற்பத்தி பெருக்குகின்றார்......
முத்தென்றும் மணியென்றும்
சிட்டென்றும் சிமிழென்றும்
கண்ணென்றும் மூக்கென்றும்
கணக்கின்றி பெறுதல் விட்டு ..

தமிழக அரசு வேளாண்மைத் துறையில் மாபெரும் புரட்சியை உருவாக்கி வருகிறது. அப்புரட்சியில் பங்கேற்கும் நல்லேர் உழவர்கள் சொல்லேர் உழவர்களாக இருக்கின்றனர். அவர்களது புலமை நாட்டுக்கு நல்வழி காட்டுவதாக அமைந்துள்ளது. அந்த வேளாண்மைக் கவிஞர்கள் நம்மை அழைத்துச்செல்லும் புதிய பாதை வெற்றிப் பாதையாக இருக்கும்.

அத்தனையும் அடிக்கரும்பெனச் சொல்லத்தகும் அக் கவிதைகளை முழு வடிவில் வாசகர்கள் சுவைக்க 'கிராம நலம்' வெளியிடும் என்னும் நம்பிக்கையால், அவைகளை நான் விவரிக்கவில்லை.

புதிய பாதை கவியரங்க விழாவின்போது வெளிநாட்டிலிருந்த தமிழக உள்ளாட்சி அமைச்சர் கவிதையிலே தமது வாழ்த்துகளை அனுப்பியிருந்தார்கள். கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் திரு திருமால் அவர்கள் விழாவில் வாசித்த அக்கவிதையில்—

''ஈன்றோர் சான்றோர் ஆன்றோர் அனைவரும்
உயர்ரக மணி விதை ஊட்டும் வளத்தை
ஊரார் உணர உயர்கவி கேட்போம்''

என்று கூறியிருப்பது சாலப் பொருத்தமானதாகும்.

ஆமாம். அந்த வேளாண்மைக் கவியரங்கம் புதுமையானது—புகழுக்குரியது என்பதைவிட—அக்கவியரங்கைக் கேட்டோரை 'நமக்குத் தொழில் உழவு' என்பதைச் சொல்லிக்கொள்வதை பெருமைக்குரியதாக்கியது. பெருமிதம் கொள்ளச்செய்தது. இதைவிட அக்கவியரங்க வெற்றிக்கு வேறு சான்று வேண்டுமா?

[ மாண்மிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவியரங்கத் தலைமையுரை (கவிதை வடிவில்) முழுதும் அடுத்த இதழில் இடம் பெறும்.]

## இரண்டாவது சிறந்த கிராமமெனப் பரிசுபெற்ற

# அனந்தலை

[செங்கற்பட்டு மாவட்டம் வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனந்தலை கிராமம், தமிழகத்தின் இரண்டாவது சிறந்த கிராமமெனத் (1966-67 [தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்தைப் பற்றிய குறிப்புகளைக் கீழே காணலாம்.]

ஒரு கிராமத்தில் மக்கள் சமுதாயம் தனது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கான அடிப்படைத் தேவை, பங்கேற்கும் தலைவருக்கு பொதுப் பணியில் இருக்கும் ஆர்வமும், கிராம நலனுக்கான காரியங்களில் மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்புமேயாகும்.

அனந்தலை—கொளத்தூர், எடக்குப்பம், புதுப்பேட்டை ஆகிய உட்கடை கிராமங்களைக் கொண்ட ரெவின்யூ கிராமமாகும். 1959-ல் இங்கு ஊராட்சி மன்றம் அமைக்கப்பட்டது. மக்கள் தொகை 2829 ஆகும். அனந்தலை ஊராட்சியின் சராசரி ஆண்டு வருவாய் ரூ. 5,000. பெண் உறுப்பினர் உள்பட 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

### தேடிக்கொண்ட பொது வசதிகள்

அனந்தலை ஊராட்சி நான்கு மைல்கள் நீளமுள்ள பொதுப் பாதைகளையும் குடிநீர் வசதிக்கென 6 பொதுக் கிணறுகளையும் பராமரித்து வருகிறது. ஊராட்சியில் உள்ளடங்கியஎல்லாக் கிராமங்களிலும் 5 வானொலிப்பெட்டிகள் உள்ளன. சிறுவர் பூங்கா ஒன்றும் படிப்பகத்துடன் கூடிய நூல் நிலையமொன்றும் நன்கு பயன்படுகிறது.

சுமார் 25 ஏக்கர் பரப்புள்ள ஒரு பெரிய பழத்தோட்டம் இன்று பூத்துக் குலுங்கி நிற்பது, ஊராட்சியின் சிறப்பான பணிகளில் ஒன்றாகும். இவை என்றென்றும் ஊராட்சிக்கு வருவாய் அளிக்கும் பயனுள்ளதாகும்.

### கூட்டுறவே நாட்டுயர்வு

இங்கு 1929-ம் வருடமே பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உருவாகி செயலாற்றுகிறது.

அச்சங்கத்தின் வாயிலாக—விவசாயப் பெருமக்கள் தனிப்பட்டவர்களின் கடன் சுமையிலிருந்து தப்ப முடிகிறது. இதனையொட்டி பெரிய அளவில் விற்பனைச் சங்கமொன்றையும் அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது.

[அனந்தலை ஊராட்சியின் தலைவர், உறுப்பினர்கள் படம் பக்கம் 26-ல்]

### கல்வியே அழியாச் செல்வம்

அனந்தலை ஊராட்சியில்-வாலாஜா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் இரண்டும், தனியார் உயர் ஆரம்பப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. மொத்த பள்ளி வயதுப் பிள்ளைகள் 494. இதில், கல்வி பயிலும் குழந்தைகள் 407. இப்பள்ளிகளில் சுமார் 175 பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டம் தொடர்ந்து திறம்படச் செயல்பட்டு வருகிறது.

### மகளிர் நலம்

1963-ல் தொடங்கப்பெற்று, 40 அங்கத்தினர்களைக் கொண்ட மாதர் சங்கம் சிறப்புடன் பணியாற்றி வருகிறது. பூத்தையல், ஆடை தைத்தல் முதலியன கற்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் கண்காணிப்பு, சத்துணவுத் திட்டம், சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் மாதர் சங்கம் சிறப்பான பணியாற்றுகிறது.

### சமூகக் கல்வி

அனந்தலையில் கிராம வானொலி மன்றம் அமைக்கப்பட்டு, தொடர்ந்து இயங்குகிறது. மன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, கூறப்படும் அரிய கருத்துக்களை தெரிந்து, செயல்முறைக்குக் கொண்டுவந்து நற்பயன் பல பெற்றுள்ளனர்.

### உயிரூட்டும் விவசாயம்

இங்கு பெரும்பாலும் விவசாயிகளால் திருந்திய முறை விவசாயக் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன. சீரிய புதிய ரக வித்துக்களும், ரசாயன உரங்களும், பசுந்தாள் உரங்களும் பெரும் அளவு பயன்படுத்தப்படுகின்றன. கிளிரிசீடியா, ஐபோமியா போன்ற, நிரந்தரமாக தழையுரம் கொடுக்கும் செடிகள் பெருமளவு பயிராக்கப்பட்டுள்ளன, இதன் அரிய பயனை விவசாயப் பெருமக்கள் அனைவருமே அறிந்துள்ளனர்.

ஊராட்சியின் மூலமாக—23 கம்போஸ்ட் உரக் குழிகள் வெட்டப்பட்டு சிறந்த கம்போஸ்ட் உரமும் தயாரிக்கப்படுகிறது. அறுவடைக்குப்பின் நன்செய் நிலங்களில் பசுந்தாள்-உரவகைப் பயிர்கள் விதைக்கப்படுகின்றன.

விளை நிலங்களிலிருந்து மண் மாதிரி எடுத்து, பரிசோதனைக்கு அனுப்பி, கூறப்படும் ஆலோசனை பின்பற்றப்படுகிறது. உணவு உற்பத்தி அதிகரிப்பதற்கான வழிமுறைகள் அனைத்திலும் அனந்தலை விவசாயிகள் ஆர்வத்தோடு பங்கு கொள்கின்றனர். அவர்களின் ஆற்றலை வளர்க்கும் விதத்தில் ஊராட்சித் தலைவர் திரு அ. கு. முருகப்ப கவுண்டர், பொதுப் பணிகளில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

தமிழகத்தின் இரண்டாவது தலைசிறந்த கிராமமாக பரிசு பெற்றுள்ள அனந்தலை ஊராட்சி, மேலும் பயனுள்ள காரியங்களை முன்னின்று முடித்து பெருமையுறுமென நம்புவோமாக.

## புதிய ரக தக்காளி

"தக்காளியில் பல இனுசுகள் இருக்கின்றன. கோயமுத்தூர் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடத்தில் 245 தக்காளி வகைகளை ஆராய்ந்து, எல்லாப் பருவங்களிலும் வளரக்கூடியதும், சுமாரான நிறுவனத்தில் நல்ல மகசூலையும் உயர்ரகப் பழங்களை தரக்கூடியதுமான, Co—1 என்ற புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் வயது 135 நாட்களே. ஏக்கர் ஒன்றுக்கு 15,000 முதல் 20,000 கிலோ கிராம் வரை மகசூல் கிடைக்கிறது. பழத்தைத் துளைக்கும் புழுக்களாலும், இலைப்புள்ளி நோயாலும் இந்த புதிய ரகத் தக்காளி அதிகம் பாதிக்கப்படுவதில்லை. ஓர் ஏக்கர் பயிரிட 120 கிராம் விதை தேவைப்படும். அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய விவசாய டிப்போவிலிருந்து இந்த விதையைப் பெறலாம், இந்த ரகம் வீட்டுத் தோட்டத்துக்கும் ஏற்றதாகும்.



# முப்பண்பில் மகிழ்ந்த ஒருவர்



அண்ணல் காந்தியடிகள் அமரரான போது, நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என. அண்ணாதுரை அவர்கட அவ்வமயம் ஆற்றியஉரையிலிருந்துசிலபகுதிகள்

''நாம் அரசுரிமை இழந்திருந்த போது அவர் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.''

''அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. உலக மன்றத்திலே நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டு விட்டது.''

''அவர் பிறந்தபோது, கோயில் கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள்எல்லாம் திறந்துவிட்டன.''

''குடித்துக்கிடப்பது மிகச் சாதார ணம். சகஜம் என்று யாரும் எண்ணிக் கொண்டிருந்த நாட்கள், அவர் பிறந்த காலம். மது விலக்குச் சட்டம் அமுல் நடத்தப்படுவதைக் கண்டான பிறகே அவர் மறைந்தார்.''

''இவ்வளவையும், அவர் மந்திரக் கோல் கொண்டோ, யாக குண்டத் தருகே நின்றோ சாதிக்கவில்லை - மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார். நாட்டிலே உற்ற மற்றக் கொடுமை கள், ஜாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்துவிட்டு, ''உலகினர் கண்டு பின்பற்றத் தக்க முறையிலே உன்னதமானஇலட்சியங்களைக்கொண்ட ஒருசமுதாயத்தைக் காணவிரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டு வந்தார்.''

''விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும் — நல்லாட்சி அமைக்க வேண்டும்—மக்களை நல்லவர்களாக்க வேண்டும்—வீரம்—திறம், விவேகம், மூன்றையும் விரும்பினார். மக்களை நல்லவர்களாக்கவேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம், நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்த முடியும். நாட்டுக்கு விடுதலை யும் கிடைத்து மக்கள் நல்லவர்க ளாகாமல், கொலை பாதகர்கள், கொள்ளைக்காரர்கள், ஆதிக்க வெறி யர்கள், ஆள் விழுங்கிகள், ஆதி யோரின் ஆதிக்கம் அழிந்து படா திருந்தால், விடுதலையால என்ன பலன்? வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளிமானை வேங்கையின் முனபு துள்ளி விளையாட விடுவதா?''

''இதை எண்ணினர். நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழி கூறி, அந்தப் பொறுப்பை உடனிருந்தோரிடம் தந்தார். மக்களை நல்லவர்களாக்கும் நற்பணி புரிய லானார்.''

''ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம், பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார். உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் காலத்தில் ஒன்றுக்கொன்று குறை யாத அளவில் கொண்டே இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள்— கொள்ள வேண்டிய குணத்தை அவர் ஒருவர் கொண்டிருந்தார்.''

''அவர் அளித்த விதையோ இருக் கிறது. இதோ, இதைத் தூவுவேன், இதோ இருக்கிறது. பூந்தோட்டம் காண்பேன், அந்த உருவில் அவரைக் காண்பேன், அந்த மனத்திலே அவர் பெருமை தெரியக் கண்டு மகிழ்வேன்—அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்று கூறவேண்டும்—அவர் அனை வரும் ஒன்று, எனும் அன்பு மார்க்கக் கருத்தைத் தூவி வந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே, நமது உறுதியாக இருக்க வேண்டும்.''

''புத்தர் காலத்திலே நடந்தேறியது போல, புதிய வழியைக்கொள்வோம் என்ற உறுதிகொண்டு உழைப்பதே, நாம் அந்த உத்தமருக்கு எழுப்பக் கூடிய நிலையான ஞாபகச் சின்னம்.''

[மூலம்: அண்ணாவின் வானொலி உரை தொகுப்பு: 'கன்னாப்பன']

தமிழகத்தின் சிறந்த ஊர்ப்பணியாளர்

**திரு ஏ. சுவாமிநாதன்**




[திரு ஜி. சாந்தசீலன், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்]

"உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான திருந்திய விவசாய முறைகளை மேற்கொள்வதற்கு: 'கிராம சேவக்'கின் சேவை எங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது" என்ற ஒருமித்த கருத்து, அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களிடையே நிலவுகிறது

"விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதே எனது கடமை. அதற்கெனவே நான் பயிற்சி பெற்றுள்ளேன். எனது பணியைச் செய்து முடிப்பதில் நான் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கிறேன்" என்கிறார் ஊர்ப்பணியாளர் திரு ஏ.சுவாமிநாதன்.

தமிழக அரசு ஆண்டுதோறும், சிறப்பாகச் செயலாற்றும் கிராம சேவக்குகளைத் தேர்ந்தெடுத்து, பரிசளித்து ஊக்குவிக்கிறது 1965—66-ம் ஆண்டிற்கென தமிழகத்திலேயே சிறந்த கிராம சேவக்கென முதல் பரிசு பெற்றுள்ளார், செங்கல்பட்டு மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், திருமழிசையில் பணிபுரியும் கிராம சேவக் திரு ஏ சுவாமிநாதன்.

சுவாமிநாதன்—பயிற்சி முடிந்து கிராம சேவக்காக அலுவலை மேற்கொண்டு நான்கு

## ஊர்ப் பணியாளரைப் பாராட்டி . . .

"என் கடன் பணிசெய்து கிடப்பதே!" என்ற தூய தொண்டுள்ளத்தோடு, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தின் திருமழிசைப் பகுதியில் ஊர்ப்பணியாளராக (கிராம சேவக்) புணிபுரிகின்ற திரு ஏ. சாமிநாதன், தமிழகத்திலேயே சிறந்த ஊர்ப்பணியாளரென தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணு அவர்களிடம் முதற்பரிசை பெற்றவராவார்.

இவர் 1965—66ம் ஆண்டு முதல் விவசாயத்தில் பல மாறுதல்களை செய்து இருக்கிறார். காலங்கருதி இடத்தாற்செயின் என்பதற்கிணங்க, விவசாயிகளுக்கு தரமான விதைகள், நாற்றுவிடுதல், நாற்று நடுதல், உரமிடுதல் ஆகிய இவைகளைக் கற்பித்து, நவீனகால முறைகளை செயல்படுத்திக் காட்டுகிறார்.

"ஏரினும் நன்றும் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்ற குறள் நெறிக்கிணங்க, விவசாயிகளுக்கு அம்முறைகளை எடுத்து விளக்கி, அவர்களுடன் இரண்டறக் கலந்து விவசாயத்தை ஊக்கப்படுத்தி வரும் திரு. சாமிநாதன் அவர்களின் அளப்பருஞ்செயலைக் கண்டு பேருவகை அடைகின்றேன்.



ஆண்டுகளே கடந்துள்ளன. ஆயினும், அவரது சாதனை களின் புகழ் தமிழக மெங் கும் பரவுகிறது

சுவாமிநாதன், திருநெல் வேலி மாவட்டத்தில் வீரம் மிகுந்த பாஞ்சாலஞ் குறிச்சி யின் அருகிலுள்ள கீழமுடிமண் என்னும் கிராமத்தில் விவசா யக் குடும்பத்திலே பிறந்தவர். அவர் பணிபுரியவந்த திரு மழிசை, 1414 ஏக்கர் நன் செய்யும் 1030 ஏக்கர் புன் செய்யும் விளை நிலமாகக் கொண்ட பகுதியாகும். குறு கிய காலத்தில் அமோக விளை சல் கொடுக்கக்கூடிய நெல் ரகங்களான ஏடிடி 2, கல்சர் 2410, ஐ.ஆர்.—8 போன்றவை பரவ, தீவிர முயற்சிகள்செய்து வெற்றிகண்டுள்ளார். இவர், 1965—66 வருடத்தில் சுமார் 200 ஏக்கர் ஏடிடி 27 நெல் ரகத்தை 'கட்டுக்கோப்பான சாகுபடி முறை'ப்படி பயிரிடச் செய்து, அதை ஒரு விழா வாகவே கொண்டாடி, எங்கும் பரவச் செய்திருக்கிறார். இளை ஞர்கள் விவசாய சங்க அமைப்பு களில் இவருக்கு மிகுந்த ஆர்வ முண்டு. "இந்த அமைப்பு களின் மூலமாகத்தான், திருந் திய முறை விவசாயத்தை எளிதில் புகுத்த முடியும். மருந்து தெளிக்கும் கருவி, சேறுகலக்கும் கருவி, தழை மிதிக்கும் கருவி ஆகியவை இந்த சங்கங்களின் மூலமாக ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்க முடிகிறது" என் கிறார் சுவாமிநாதன். இவரு டைய தீவிர முயற்சியின் காரண மாகவே, திருமழிசையில் ஒரு கூட்டுறவு பண்டக சாலையும், மாதர்கள் கூட்டுறவு பண்டக சாலை ஒன்றும் உருவாகி திறம்பட இயங்கி வருகின்றன பயிர்ப் பாதுகாப்புக்கென ஒரே காலத்தில் மின் விசை மருந்து தெளிப்பான்களை கொண்டு கிராமத்தில் உள்ள எல்லா வயல் பரப்புகளிலும் (mass sprayer) மருந்துதெளித்த அந்த வட்டாரத்திலேயே புதிய தொரு சாதனையை ஏற்படுத்தி இருக்கிறார்.

ஊராட்சி ஒன்றியத்தின் மூல மாக புதிய விவசாயக் கிணறு கள் வெட்டுவதற்கு மான்ய முறை கடன் மூலம்—சுமார் 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்படி செய்திருக்கிறார். மேலும் கால்நடைத் தீவன உற் பத்தித் திட்டத்தின் கீழ் 25 ஏக்கர் நீர்பாசன வசதி பெற் றுள்ளது இவரது முயற்சியால்.

அதிக முட்டையிடும் கோழி இன குஞ்சுகளை வீடுகள் தோறும் வளர்த்து, பயன்

---

அதோடன்றி, தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் உரக்கடன், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய திட்டங்களை முறையுடன் செயல்படுத்தி, பலன் கொழிக்கச் செய்துள்ளார். பவர்ஸ் பிரேயர், டஸ்டர் போன்ற கருவிகளை, தானே ஊராட்சி ஒன்றியத்தி லிருந்து எடுத்து வந்து, அப்பகுதியில் 120 ஏக்கர் நஞ்சை நிலங் களுக்கு பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வைத்து, பூச்சிகளைப் போக்கி, விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும், ஊக்கமளித்து வருவதைக் காண மட்டற்ற மகிழ்வெய்துகிறேன்.

நம் நாடு விவசாயத்தில் தன்னிறைவு அடைய வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு, மற்றவர்களுக்கு முன்னோடியாக சேவை செய்து, விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் ஊக்கமளித்து, ஆக்கம் பெற அயராது உழைத்து வரும் திரு. சாமிநாதன் அவர்கள் நீடு வாழ்க! நெடிது வாழ்க என வாழ்த்துகிறேன்."

டி. இராசரத்தினம்,
சட்ட மன்ற உறுப்பினர்.
திருப்பெரும்புதூர் தொகுதி,
தமிழக அரசு.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமழிசை மையத்தில் வேலை செய்யும் ஊர்ப்பணியாளர். திரு ஏ. சுவாமிநாதன் பயிற்சிக்காலத்தில் அவர்கள் கற்றுக்கொண்டவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வமும் தீவிரமும் கொண்டவராக விளங்குகிறார். பொறுக்கு



G.N.—4

பெற வேண்டும் என்பதில் இவருக்கு தனிப்பட்ட ஆர்வம் உண்டு. செயற்கை முறையில் குஞ்சு பொறிக்கும் கருவி (Incubator)யைகொண்டு சுமார் 850 குஞ்சுகள் வரை விநியோகம் செய்திருக்கிறார். திருமழிசையில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் கண்டுவிட்டால், அங்குள்ள திரைப்படக் கொட்டகையில், தடுப்பு முறைகளை எடுத்துச் சொல்லும் 'சிலேடு' விளம்பரங்கள் காட்டப்படும். இது கிராம சேவக்கின் கைப்பொருளிலிருந்து செய்யப்படுவது. கால்நடைகளுக்கு தடுப்புஊசி போட்டுக்கொள்ள விளம்பரத்தைக் கண்டதும் வரிசையில் நிற்பார்களாம் விவசாயிகள்.

திருமழிசையில் கால் நடை செயற்கை முறை இனவிருத்தி நிலையம் இருக்கிறது. ஒரு வருடத்திற்கு சுமார் 1,500 பசுக்களுக்கும் எருமைகளுக்கும் சிந்து, ஜெர்சி, முரா போன்ற நிறைய பால்தரும் இனங்களின் செயற்கை முறை இனவிருத்தி நடைபெறுகிறது இதைகிராம சேவக்கின் ஆர்வத்தின் பலனாகவும் கொள்ளலாம்.

திருமழிசையில் இரண்டு தேவஸ்தான குளங்கள் இருக்கின்றன. அவை துர்நாற்றம் நிறைந்து பயனற்றவையாக இருந்தன. சத்துணவுத் திட்டப்படி, 35,000 மீன் குஞ்சுகளை மான்யமுறையில் வாங்கி குளங்களில் விட்டு, மீன் வளத்தைப் பெருக்கி இருப்பதோடு, குளங்களையும் பயன்படுமாறு செய்தது இவரது முயற்சியின் பயனாகும். தற்போது இந்தக் குளங்களிலிருந்து மீன், கர்ப்பிணிகளுக்கும், பள்ளி மதிய உணவிற்கும் பயன்படுத்தப் படுகிறதென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

"மக்களோடு இவ்விதம் ஒன்றிப்போக எவ்வாறு வழி வகுத்துக்கொண்டீர்கள்" என்று கேட்டபோது திரு சுவாமிநாதன் கூறினார் :—

"விவசாயிகள் என்னை கண்டு கொள்ளும்படி குறிப்பிட்ட நேரங்களில் தலைமை இருப்பிடத்தில் தங்கி இருப்பேன். உடனுக்குடன் அவர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்து அனுப்புவேன். வேலையின் காரணமாக வெளியே சென்றிருக்கும் நேரங்களில், எனது இல்லத்தின் முன்பு உள்ள தகவல் பலகையில், எந்த இடத்திற்குச் சென்றிருக்கிறேன் என்பதை தவறாது குறிப்பிடுவேன். அலுவல் நேரங்களில் விவசாயிகளுக்கு மத்தியில் இருப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்" என்றார். அவரது குரலில் நிறைந்திருக்கும் ஆர்வத்திலே எண்ணியதை முடிப்பதில் கொண்டுள்ள நம்பிக்கையை உணர முடிகிறது. மீண்டும் ஒருமுறை அந்தக் குரலைக் கேட்கத் தோன்றுகிறது. ஏனெனில், அதுவே இந்த நாட்டை வலுப்படுத்துவதாகும்.

---

## பாராட்டுரைகள்

விதை ரகங்களை இந்தப் பகுதியில் பரப்பியதுடன், பெரிய அளவில் செந்நிய முறை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்துள்ளார். இதற்கெனவே திருமழிசையிலும், செம்பரம்பாக்கத்திலும் இளைஞர் விவசாயச் சங்கங்களை ஏற்படுத்தி, பயனுள்ள புதிய விவசாயக் கருவிகளை ஏழை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாடகைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார்.

இம்மாதிரி கிராம நல ஊழியர்கள் வட்டாரம் முழுவதிலும் பொறுப்புணர்ச்சியுடனும், அக்கறையுடன் பணியாற்றினால் வட்டாரம் நல்ல அபிவிருத்தி காணுவதுடன், கிராமங்களில் விவசாயமும் மற்ற கைத்தொழில்களும், நல்ல முறையில் வளர்ச்சி பெற்று நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையும். திரு சுவாமிநாதன் இந்த முயற்சியில் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து, ஏனையோருக்கும் வழிகாட்டியாகத் திகழவேண்டுமென விரும்புகிறேன்.

**ஜே. மதன்ராஜ்,**
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர்.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமழிசை பேரூராட்சியைச் சேர்ந்த கிராம நல ஊழியர் திரு சுவாமிநாதன் அவர்கள் சுமார் நான்கு வருடங்களாக பணிபுரிந்து வருகின்றார். பொது மக்களோடு நல்ல தொடர்பு கொண்டு சீரிய முறையில் கிராமத்திற்கு தேவையான நற்பணிகளை நல்ல முறையில் செய்து வருகின்றார் என்பதை என் மனமார்ந்த எண்ணத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டி. வி. ராதா,**
தலைவர்,
திருமழிசை பேரூராட்சி.




## செங்கற்பட்டு மாவட்டம்

[ஆக்கப்பணிகளில் பெரும் கவனம் செலுத்தி, ஊர்தோறும் இல்லந்தோறும் மகிழ்ச்சி ததும்பிட புதியதோர் உலகம் சமைத்து, வெற்றியின் விளைநிலமாக தமிழகத்தை உருவாக்கி, வருகிறது, நமது அரசு. அந்த வெற்றியின் விளைநிலத்தில் தாம் கண்டதையும் கேட்டதையும் தொகுத்து கட்டுரையாக்கித் தருகிறார் நஜன். இக்கட்டுரைத் தொடர் 'கிராம நலம்' இதழில் அவ்வப்போது இடம்பெறும். —ஆ-ர்]

# தாகத்திற்குத் தண்ணீர்

'நஜன்'

மனிதன் உயிர்வாழ மிக மிக முக்கியமாக வேண்டியது தண்ணீர். உண்ண உணவில்லாமலும் உயிர் வாழலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழவே முடியாது. அதனால்தான் தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பது மிக மிக புண்ணியம் என்று ஆன்றோர் கருதினர்.

பண்டைத் தமிழர்கள் நிலத்தை ஐந்தாகப் பிரித்ததில் பாலை என்பதும் ஒன்று. தண்ணீர் இல்லாமல் வறண்ட மணற்பாங்கான நிலம் தான் பாலை. பண்டைத் தமிழகத்தில் நிலம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருந்தும் பாலை என்பது இடையவே இடையாது. (இப்போது திருநெல்வேலியில் ஒரு சிறு இடம் பாலையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.)

இந்த தண்ணீரின் அவசியத்தைத் தமிழக அரசு நன்கு உணர்ந்து அதை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதில் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கின்றனர் என்பதை செங்கற்பட்டு மாவட்டத்தில் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. எங்கெங்கு கிணறுகள் உள்ளதோ அங்கெல்லாம் அழுத்த விசை (Pressure) பம்புகள் அமைத்து குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. தண்ணீர் கொண்டு வருவதற்காக ஆறு எங்கே, குளம் எங்கே என்று நீண்ட தூரம் தேடிச் சென்று குடங்களில் தண்ணீர் கொண்டுவரும் தொல்லை இப்போது செங்கற்பட்டு கிராமங்களில் குறைந்துக் கொண்டுவருகிறது.

சில கிராமங்களில் உயரத்தில் (overhead tank) தண்ணீர் தொட்டிகள் கட்டி, குடிக்கும் தண்ணீர் தாராளமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

குழாய்கள் அடியில் தண்ணீர் எடுத்துச் செல்ல வரும் தாய்க்குலத்தினரின் மட்டற்ற மகிழ்ச்சியை

அவர்கள் முகத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. "மவராசன் குடிக்க தண்ணீர் கிடைக்க இந்த ஏற்பாடு செய்திருக்கிறன் அவன் நல்லாயிருக்கணும்" என்று வாழ்த்தினுள் ஒரு மூதாட்டி. இந்த குடி தண்ணீர் திட்டம் பற்றி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு லட்சுமி காந்தன் பாரதி என்னிடம் குறிப்பிடுகையில் "சென்ற மார்ச் மாதத்தில் இந்த தண்ணீர் வழங்கும் திட்டத்தை ஒரு பெரும் விழாவாகவே பத்து தினங்கள் கொண்டாடினோம். அப்போது வராது போய்விட்டீர்களே! மக்களின் ஆர்வமும் மகிழ்ச்சியையும் நான் எப்படி வருணிப்பது? கடும் கோடையில் இம்மாவட்டம் குடிக்க தண்ணீர் இல்லை என்று தவிக்கவில்லை. இந்த அரசின் மாபெரும் சாதனைகளில் இது ஒன்று" என்றார்.

செங்கற்பட்டு மாவட்டம் பெரும் பாலும் ஏரிப் பாசனங்களாலும் கிணறு பாசனங்களாலும் தன் விவசாயத்தை நடத்திவருகிறது. கிணறு பாசனம் மூலம் விவசாயம் நடைபெறுவதை 'இறைப்பட்டரை' என கூறுகிறார்கள். மின்சார பம்புகள் பரவலாக விநியோகிக்கப்பட்டிருக்கிறபடியால், எங்கு பார்த்தாலும் விவசாய வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று வயல்கள் காணப்படுவதால் தப்பித் தவறி தஞ்சை மாவட்டத்திற்கே வந்து விட்டோமா என்ற பிரமை ஏற்படுகிறது. பாலாறு வறண்டு காணப்படுகிறதே யொழிய மணலுக்கடியில் நிரந்தர ஊற்றுகள் மறைந்த செல்வமாக இருந்து வருகிறது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத் தலைமைச் செயலகம் காஞ்சிக்கு மாற்றப்பட்ட விழாவில் பேசுகையில் இந்த மறைந்த செல்வத்தை எப்படி பயன்படுத்துகிறது என்பது குறித்துத் தீவிரக் கவனம் செலுத்தப்படவிருப்பதாகக் கூறினார்.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருவாலங்காட்டிலும் திருத்தணிகையிலும் குழாய்க் கிணறு



குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

அமைக்கும் இயந்திரங்கள் செயல்பட்டு வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மற்றொரு முக்கியமான விஷயம் பூமிக்கடியில் நீர் ஓட்டம் சில பகுதிகளில் இருப்பது. 'டிரங்' ரோடு ஓரமாக இந்த நீரோட்டம் இருப்பதாகவும் இரு புறங்களில் 2 மைல் தூரத்திற்கு எப்போதும் பாசன வசதி இருப்பதாகவும் அதற்கு மேற்பட்ட தூரங்களுக்கு இந்த ஓட்டத்தின் நீர் வசதி இருப்பதில்லை என்றும் செங்கற்பட்டு திருவள்ளூர் வட்டார நிலச்சுவான்தாரரான திரு ஜி. ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பூண்டியிலுள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றிருந்தபோது அங்குள்ள அதிகாரியை இதுபற்றி விசாரித்தபொழுது இப்போதுதான் பூமிக்குள் இருக்கும் தண்ணீர் விஷயமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றனவென்றும் இந்த நீரோட்ட விஷயம் ஆராய்வதற்குரியதுதான் என்றும் இவ் விஷயம்பற்றி ஆராய்ச்சி நிலையம் விரைவில் கவனிக்கும் என்றும் கூறினார்.

நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கு இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று கேட்டேன். பூண்டித் தேக்கத்தில் நீர் பெருக்கு அதிகமாக இருக்கும் காரணமாகவே இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதாம். தமிழ் நாடு மட்டுமின்றி அண்டை மாநிலங்களுக்கும் இங்கு நடைபெறும் ஆராய்ச்சி பயன்பட்டுவருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.



மின்சாரக் குழாய்கள் மூலம் நீர் இறைத்தல்.

ஆறுகளின் போக்கு பற்றியும் அதற்கேற்ப நீர் நிலை அமைப்பது பற்றியும் இங்கே ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. கீழ்பவானி, மணி முத்தாறு, மலம்புழா, துங்கப் பத்திரா, கிருஷ்ணா, பெண்ணாறு திட்டங்களில் அணைக்கட்டுவதற்கு முன் தோன்றிய பிரச்னைகள் இங்கு செய்யப் பட்ட ஆராய்ச்சியின் விளைவாக சமாளிக் கப்பட்டன. தமிழகத்திலுள்ள பாசன ஆராய்ச்சி நிலையம் இது ஒன்றே ஒன்றுதான்.

**2 மக்கள் தொடர்புக்கு ஒரு திட்டம்**

ஊராட்சி நிறுவனங்களின் மூலம் மக்கள் எவ்வளவுக்குப் பயன்படுகிறார்கள் என்பது நேரில் பார்த்தபோது தான் தெரிந்தது. கிராம சேவக்குகளும், கிராம சேவிகைகளும் எவ்வளவு தூரம் மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதையும் நேரில் உணர முடிந்தது. பூந்தமல்லி வட்டார கிராம சேவகர் திரு சுவாமிநாதனும் திருவள்ளூர் வட்டார கிராம சேவிகை செல்வி வசந்த குமாரியும் தங்களுடைய சிறந்த சேவைக்காக தலா ரூ. 1,000 பரிசு அரசாங்கத்தினிடமிருந்து பெற்றிருக்கிறார்கள்.

ஒரு கிராம சேவகர் ஒரு மாதத்தில் சுமார் 20 கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களிடையே வேலை செய்யவேண்டும். ஆரம்பத்தில் கிராம மக்கள் ''இவர்கள் சொல்வதை சொல்லிவிட்டுப் போகட்டும்'' என்ற அலட்சிய மனோபாவத்துடன் தான் இருந்தார்களாம். ஆனால் நாளடைவில் 'நம் நன்மைக்குத்தான் சொல்கிறார்கள்'' என்பதை உணர்ந்து ஒத்துழைக்க ஆரம்பித்தார்களாம். இப்போது அவர்கள் என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவர் போல பாவிக்கிறார்கள்'' என்கிறார் செல்வி வசந்த குமாரி.

''உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை. கிராம மக்களுக்குத் தேவையானவற்றை காலாகாலத்தில் போதிய அளவு கொடுத்து வந்தாலே போதும்'' என்கிறார், கிராம சேவகர் திரு. சுவாமிநாதன்.

ஏராளமானவர்கள் அரசாங்கம் தரும் உதவிகளை நாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வருகிறார்கள். அரசு அதிகாரியிடமிருந்து முன்பு போல அல்லாமல் இப்போது துரிதமாக உதவி கிடைத்து வருவதாக அவர்களில் ஒருவர் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமிகாந்தன் பாரதி மக்களுக்கு நிர்வாகத்தினிடம் இன்னும் அதிக நம்பிக்கை ஏற்பட ஒரு திட்டம் வைத்திருக்கிறார். இது பற்றி அவர் என்னிடம் குறிப்பிட்டதாவது.

''பொது மக்களிடமிருந்து வரும் ஒவ்வொரு மனுவுக்கும் அல்லது முறையீட்டுக்கும் ஒரு 'கார்டு' உடனடியாக அனுப்பப்படும். அதில் மனுவிலுள்ளத் தன்மைக்கே ஒரு தேதி குறிப்பிட்டு அதற்குள் பதிலை எதிர்பார்க்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட அந்தத் தேதிக்குள் கடிதம் போட்டவருக்கு பதில் அனுப்பப்பட்டுவிடும். அப்படி அதற்குள் அரசாங்கத்தினிடமிருந்து பதில் வராவிட்டால் அக்கடிதம் எழுதியவர் தமக்கு வந்த கார்டை எடுத்து வந்து மாவட்ட ஆட்சியாளரையே நேரில் காணலாம். இம்முறை மூலம் நிர்வாகமும் சீர்படும், பொதுமக்களுக்கும் அரசிடம் அதிக நம்பிக்கை ஏற்படும் என்றும் திரு பாரதி தெரிவித்தார். இத்திட்டத்தை வெகு சீக்கிரமே தான் அமல் நடத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு லட்சுமிகாந்தன்பாரதி இளைஞர். சுறுசுறுப்பும் எதையும் நுணுக்கத்துடன் நோக்கும் திறனும் கொண்டவர். இவர் இம்மாவட்ட ஆட்சியாளராக வந்தது செங்கற்பட்டின் பல அதிருஷ்டங்களில் ஒன்று என்று செங்கை மாவட்ட மக்கள் கூறுகிறார்கள்.

காஞ்சியில் சமீபத்தில் நடைபெற்றப் பொருள் காட்சியில் பொது மக்கள் பயன் பெறவேண்டும் என்கிற மாவட்ட ஆட்சியாளரின் துடிப்பு வெளிப்பட்டது. கண்காட்சியில் ஆடம்பரமான அரங்குகள் எதுவும் இல்லை. ஆனால் கிராமங்களிலிருந்து வரும் விவசாயிக்கு பயன் தரும் முறையில் சில அம்சங்கள் இருந்தன.'' உங்களுக்கு பொறுக்கு விதை வேண்டுமா? ரசாயன உரம் வேண்டுமா ? அல்லது ஒரு சிறு தொழில் ஆரம்பிக்க வேண்டுமா? நீங்கள் அவைகளைப் பெற இதைச் செய்ய வேண்டும். இந்த இடத்திற்கு வந்தால் உங்களுக்கு இந்த உதவி கிடைக்கும், போன்ற தகவல்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றன. இக்கண்காட்சியைப் போலவே சென்ற மார்ச் மாதத்தில் மதுராந்தகத்தில் ஒரு கண்காட்சி நடைபெற்றதென்றும் அதன் மூலம் அநேக கிராம வாசிகள் பயன்பெற்றனர் என்றும் திரு பாரதி தெரிவித்தார். ஒரு கிராமவாசி யாருடைய சிபார்சுமின்றி தனக்கு வேண்டிய உதவியை காலதாமதமின்றி அரசினரிடம் பெறவேண்டும். அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்துவதே தன் லட்சியம் என்று அவர் தெரிவித்தார்.

32-ம் பக்கம் பார்க்க

# சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
## பம்புடன் கூடிய
## Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்
## நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்



விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது



தாராளமான
தண்ணீர்



நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு

**Kirloskar கிர்லோஸ்கர்**
**மோட்டார்**

தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.




பம்புடன்
இணைக்கப்பட்ட ஒரு
கிர்லோஸ்கர் மோட்டார்

**கிர்லோஸ்கர் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்,**
த. பெ. எண் 1017; பெங்களூர்-3, இந்தியா

பூரண வினியோகஸ்தர்கள்: **பாரி & கம்பெனி லிமிடெட்**
த. பெ. எண் 12, மதராஸ்-1. • த. பெ. எண் 208 கல்கத்தா-1.
த. பெ. எண் 506, பம்பாய்-1 BR. • த. பெ. எண் 172, புதுடில்லி-1.

PAR-713/1 TAM

# நிலக்கடலை சாகுபடியில் எனது அனுபவம்

திரு கே. பி. குப்புசாமி, விளாம்பட்டி, மதுரை மாவட்டம்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்ற குறளின் உண்மைப் பொருளை உணர்ந்து, எந்த பயிரையும் உற்சாகத்துடன் முறைப்படி சாகுபடி செய்தால் உற்பத்தி உயரும் என்பதில் ஐயமில்லை. நாடும் மக்களும் இன்று உழவர் பெருமக்களின் செயற்திறனில் நம்பிக்கை வைத்துள்ள நிலையில், விஞ்ஞானத்தின்துணை கொண்டு விளை பொருளை மிகுதியாகப் பெருக்கி உணவுக்கும், உடைக்கும் தொழிலுக்கும் அந்நியச் செலவாணிக்கும் வழிவகுத்துக் கொடுக்கவேண்டியது, நம் விவசாயப் பெருமக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

விவசாயத் துறையினரின் சிபாரிசுகளை முறைப்படி கடைபிடித்து, நான் டி. எம். வி. 2 ரக நிலக்கடலைப் பயிரை 1965–66-ம் ஆண்டில் கோடையில் இறவைப்பயிராக சாகுபடி செய்தேன். அதில் கிடைத்த மகசூலை வைத்து எனக்கு மாநிலப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. பிறரும் தெரிந்து பயன் பெறுமாறு நான் செய்த சாகுபடிக் குறிப்புகளை இங்கே சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

நிலத்தை கூப்பர் 11–ஆம் நம்பர் இரும்பு கலப்பையால் 6 முறை உழவு செய்தேன்.

**எருவும் எருவிடுதலும்:**—ஏக்கருக்கு 20 வண்டி வீதம் நன்கு மக்கிய கம்போஸ்ட் உரம் போட்டு, மீண்டும் உழவு செய்தேன். கடைசி உழவில் ஏக்கருக்கு 4 மூட்டை (160 கிலோ) வீதம் "நடராஜா மார்க்" 7-ஆம் நம்பர் ஸ்டாண்டர்டு கலப்பு உரத்தை உழவு சாலில் போட்டேன்.



திரு கே.பி. குப்புசாமி— விவசாயத்தில் ஆர்வம் மிக்க இளைஞர். 1965—66 ஆண்டிற்கென நடந்த நிலக்கடலை விளைச்சல் மாநில போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளது, அவரது சீரிய முயற்சிகளுக்குத் தக்கதொரு சான்றாகும். எவ்வாறு அப் பரிசு பெற முடிந்ததென்பதை அவரே தெளிவுபடக் கூறுகிறார்.

**விதையும் விதைப்பும்:**—ஏக்கருக்கு 55 கிலோ வீதம் டி. எம். வி. 2 நிலக்கடலை விதைப்பருப்பை, 110 கிராம் அக்ரசான் மருந்து கலந்து விதைத்தேன். முதலில் ஏர் உழுது செல்ல அதன் உழவு சாலில் ஒரு மூட்டை 7-ஆம் நம்பர் கலப்பு உரத்தை மேலே கூறியபடி போட்டுச் செல்ல, அதன் பின்பு ஓர் ஏர் உழுது செல்ல அதன் சாலில் கடலைப் பருப்பைப் போட்டுச் செல்ல, விதைக்கப்பட்டது. கடலை விதைப்பிற்கு முன் ஒரு முறை நீர் பாய்ச்சப்பட்டது. விதைத்த பின் நீர் பாச்சுதலுக்காக 6′×4 அளவில் பாத்திகள் அமைக்கப்பட்டன.

**நீர்பாய்ச்சுதல்:**— விதைப்பதற்காக உழுவதற்கு முன்பே தண்ணீர் பாய்ச்சப்பட்டது. பின் ஏர் சாலில் கடலை விதைத்து, பாத்திகள் அமைத்த பின் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சப்பட்டது.

கடலை விதைத்த 20 நாட்களுக்குப் பிறகு முதற் களை வெட்டப்பட்டது. மறுபடியும் 20 நாட்கள் கழித்து திரும்பவும் களைக்கொத்தால் களைவெட்டி, செடிகளை மிதித்து செடியின் வாதுக்கள் அலுங்குமாறு மேலே இலேசாகப்போடப்பட்டது.

**பயிர்ப் பாதுகாப்பு:**—கடலை விதைத்த ஒரு மாதம் கழித்து, எண்டிரின்

[22-ம் பக்கம் பார்க்க]

# அமோக விளைச்சல் தரும் நெல் ஐ.ஆர். 8

[மதுரை மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுகுடி கிராமத்திலுள்ள விவசாயி திரு எஸ். ஏ. செல்லத்துரை. அவர், ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்து, மாவட்டப் பயிர் விளைச்சல் போட்டியில்கலந்து 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 25-ம் நாள் அதிகாரிகள் பொதுமக்கள் முன்னிலையில் 50 செண்ட் நிலத்தை அறுவடை செய்ததில், ஏக்கருக்கு மூட்டைக்கு 48 படி கொண்ட 77 மூட்டைகள் அதாவது 385 கிலோ நெல் என்ற கணக்கில் மகசூல் கண்டிருந்தது. ஐ. ஆர். 8 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் பெற்ற திரு செல்லத்துரை, தமது அனுபவத்தை நமக்குச் சுவைபட எடுத்துரைக்கிறார்.

—ஆசிரியர்.]

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந் நெல்லென்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை" என்ற சிறப்பு மிக்க மதுரை மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுகுடி எனது சொந்த ஊர். அந்தக் கிராமத்தில் நான் 1·50 ஏக்கர் தோட்ட சாகுபடிக்கு உரிமையுள்ள ஒரு சாதாரண விவசாயி. நான் பலபத்திரிக்கைகள் வாயிலாகவும், அரசாங்கத்திலிருந்து வெளியிடும் மேழிச் செல்வம், "கிராம நலம்" முதலிய பத்திரிகைகள் மூலமாகவும் அதிசய நெல் ஐ. ஆர். 8-ஐப் பற்றிய விபரம் தெரிந்து நானும் அந்த நெல்லைச் சாகுபடி செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். இது பற்றி எங்கள் தொகுதி கிராம



சேவக்கிடம் எனது ஆவலைச் சொல்லியிருந்தேன். அவர் நமது ஊராட்சி ஒன்றியத்துக்கு 1968–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதி ஐ. ஆர். 8 நெல் வருகிறது என்று சொல்லி அன்று 15 கிலோ நெல் வாங்கிக் கொடுத்தார்.

நான் 15 கிலோ நெல்லையும் 8 செண்ட் நாற்றங்காலில் பரவினேன் (10 செண்டில் பரவும்படி கிராம சேவக் சொல்லியிருந்தார்) நாற்றங்கால் 8 செண்டையும் 6 உழவு செய்து 20 கட்டு பசுந்தழை, ஒரு வண்டி கம்போஸ்ட் உரம் போட்டு நாற்றங்கால் தயார் செய்தேன். நாற்றுப் பரவிய 20 நாட்கள் கழித்து பயிருக்கு பேன் மற்றும் விட்டி இருந்ததால் பி.ஹெச்சி. 10·/. தூவினேன். நாற்று வளராமல் இருந்ததால் 20 நாட்கள் கழித்து யூரியா 5 கிலோ மேல் உரம் போட்டேன்.

**என்னென்ன செய்தேன்....**

எனக்கு 70 செண்ட் நிலம்தான் இந்த நேரத்தில் நெல் சாகுபடி செய்வதற்கு தயாராக இருந்தது. அதில் 40 ஆடுகளும், 25 மாடுகளும் உள்ள கிடை 30 நாட்கள் வைத்தேன். 70 செண்ட் இடத்தை 7 உழவு போஸ் கலப்பையால் உழவு செய்து 2,000 கிலோ பசுந்தழை உரமும், என்.பி.கே. 14: 14: 14: கலப்பு உரம் 120 கிலோ அடி உரமாகப் போட்டு பரம்படித்து நாற்றுப் பாவிய 30 நாட்கள் கழித்து சாதாரண முறையில் ஒரு நாற்று வைத்து 12 செண்டும், 58 செண்டு இரண்டு நாற்று வைத்து சாதாரண முறையில் 8 அங்குலம் இடைவெளியிட்டு 14 பெண்களால் 70 செண்டும் நடவு செய்யப்பட்டது.

பின் 15 தினங்கள் கழித்து கிராம சேவக்கின் அறிவுரையின்படி ஒரு பாட்டில் எண்டிரின் (250 மில்லி கிராம்) ஸ்ரெப்டோ சைக்கிளின் 3 கிராமும் கலந்து 60 படி தண்ணீரில் கலந்து தெளித்தேன். பின் நட்ட 20 நாட்கள் கழித்து 20 பெண்களை வைத்து முதல் முறையாக களை எடுக்கப்பட்டது. முதல் களை எடுத்த 3 தினங்கள் கழித்து யூரியா 30 கிலோ உரம் முதல் முறையாகப் போட்டேன். பின் இரண்டாவது தவணையாக முதலில் மருந்தடித்த 15 தினங்கள் கழித்து எண்டிரின் 1 பாட்டில் ஸ்ரெப்டோ சைக்கிளின் 3 கிராம் இரண்டையும் 60 படி தண்ணீரில் சேர்த்துத் தெளித்தேன். இரண்டாவது தடவை மருந்தடித்த 3-வது நாள் இரண்டாவது தவணையாக, 10

# தமிழக உழவரின் சாதனை

பெண்களை வைத்து களை எடுக்கப் பட்டது. பின் 9 நாட்கள் கழித்து அதிகமாக களை இருந்ததால் மூன்றுவது முறையாக 10 பெண்களை வைத்து களை எடுக்கப்பட்டது. களை எடுத்த மறுநாள் அதாவது இரண்டாவது தவணையாக 20 கிலோ யூரியா மேல் உரம் போடப் பட்டது. (38-வது நாள்) பின் மூன்றுவது தவணையாக பாலிடால் ஒரு பாட்டில் (100 சி. சி.) ஸ்ரெப்டோ சைக்கிள் 3 கிராமும் 60 படி தண்ணீரில் கலந்து தெளிக்கப் பட்டது. (நட்ட 60-வது நாள்) மேலும் நெல்லின் தாள் மஞ்சளாகவே இருந்ததால் விவசாய வளர்ச்சி அதிகாரி அவர்கள் பார்வையிட்டு

மற்றும் கிராமப் பொதுமக்கள் முன்னிலையில் 50 செண்ட் அறுவடை செய்யப்பட்டது. 50 செண்டிலும் (48 படி) 38½ மூட்டையும், கிலோ 1,926. 5 கிலோ நெல் இருந்தது. ஏக்கருக்கு 77 மூட்டை (48 படி மூட்டை) 3,853 கிலோ. நான் சாகுபடி செய் 70 செண்டிலும் 54 மூட்டை நெல் அதாவது 2,699 கிலோ நெல் கண்டு முதலானது.

### பக்கபலமாக நின்றவர்கள்

நான் நல்ல முறையில் இந்த ஐ. ஆர். 8 நெல்லைப் பயிர் செய்து

பற்றி எடுத்துச் சொல்லி வந்தார். குறிப்பாக மூன்று முறை மருந்து அடித்த பின்னும் பயிர் மஞ்சளாகவே இருந்தது. அவர்கள் பார்வையிட் பாலிடால் மட்டும் தெளிக்கும்படி கூறினர். அதன்படி 1½ பாட்டில் 70 படி தண்ணீரில் தெளித்தேன். பின் பயிர் பச்சை நிறமாகி நல்ல முறையில் இருந்தது.

### அறிந்துகொண்ட உண்மைகள்

இந்தப் பயிரில் முக்கியமாக நான் தெரிந்துகொண்டது அதிக உரமிட்டால் கிளைகள் அதிகம் இருக்கும். எனக்கு 10 முதல் 20 கிளைகள் வரை இருந்தது. குறிப்பாக குறிப்பிட்ட நேரத்தில் தவருமல் ஸ்ரெப்டோ சைக்கிளின் மருந்தும் பூச்சி கொல்லி மருந்தையும் சேர்த்து குறைந்தது மூன்று முறையாவது தெளிக்க வேண்டும். நடவு செய்து ஒரு நாற்று வைத்து இடைவெளி விட்டு நடவு

**திரு எஸ். ஏ. செல்லத்துரை, சிறுகுடி**




பாலிடால் மட்டும் அடிக்கும்படி கூறினர். அதன்படி பாலிடால் மட்டும் 1½ பாட்டில் 70 படி தண்ணீல் தெளிக்கப்பட்டது.

70 செண்டும் தோட்டச் சாகுபடி ஆதலால் மின்சார மோட்டாரிலிருந்து (3 ஹெச். பி.) தினமும் 2 மணி நேரம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது.

நான் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கு ரூ. 5 கட்டியிருந்ததால் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 25-ம் நாள் மதுரை மாவட்ட கலெக்டரின் தனி உதவியாளர் திரு பி. வரதராஜூலு, மாவட்ட விவசாய அலுவலர் திரு சு. விஞயகம் நத்தம் ஊராட்சி ஒன்றியம் பெருந் தலைவர் திரு பி. தம்பி நாயக்கர்

ஏக்கருக்கு 3,853 கிலோ மகசூல் பெறுவதற்கு முக்கிய காரணம் எங்கள் தொகுதி கிராமசேவக் திரு என். பி. ராமையாவும், எங்கள் வட்டார விவசாய வளர்ச்சி அதிகாரி திரு வெ. கோபாலகிருஷ்ணன் ஆகிய இருவரின் முழு முயற்சி யாகும். எங்கள் தொகுதி கிராம சேவக் 10 தினங்களுக்கு ஒரு முறை நெல்லைப் பார்வையிட்டு மருந்தடிப்பது மேல் உரம் மற்றும் அவ்வப்போது ஆலோசனைகள் கூறி வந்தார். விவசாய வளர்ச்சி அதிகாரி இரு முறை பார்வையிட்டு பயிரின் தன்மை, மேற்கொண்டு செய்யவேண்டிய முறை

செய்தால் தான் கிளைகள் அதிகம் இருக்கும். நான் இரண்டு நாற்று வைத்ததைவிட ஒரு நாற்று வைத்து நட்ட இடத்தில்தான் அதிகமான கிளைகளும் நெல் கதிரின் மணியும் நல்ல முறையில் இருந்தது. எங்கள் கிராமத்திலும் பல விவசாயிகள் இந்த ஐ. ஆர். 8 நெல்லை சாகுபடி செய்ததில் ஏக்கருக்கு 30 மூட்டை முதல் 38 மூட்டை (48 படி) நெல் மகசூல் இருந்தது. காரணம் மேற்படி பயிர்கள் சரியான நேரத்தில் மருந்து அடிக்கவில்லை. தக்க உரமும் தண்ணீரும் விடவில்லை.

[32-ம் பக்கம் பார்க்க.]

[19-ம் பக்கத் தொடர்ச்சி]

மருந்து ஒரு முறையும், மீண்டும் 20 நாட்கள் கழித்து பாரத்தியான் மருந்து ஒரு முறையும் முன் தடுப்பாக தெளிக்கப்பட்டன. பூச்சி, நோய் எதுவும் பயிரைத் தாக்கவில்லை.

**அறுவடை:**—கடலை நன்கு முற்றியதும், அதாவது விதைத்ததிலிருந்து 110 நாட்கள் கழித்து அறுவடை செய்யப்பட்டது. போட்டிக்காக 50 செண்டு நிலத்தில் அறுவடை முறைப்படி அலுவலர்களால் செய்யப்பட்டு, மகசூல் கணக்கிடப்பட்டது.

**மகசூல்:**—ஏக்கருக்கு 2,100 கிலோ (உலராதது) வீதம் கடலை மகசூல் கிடைத்தது. இது நன்கு காய்ந்து சுத்தம் செய்த பிறகு ஏக்கருக்கு 1,102½ கிலோ (சுமார் 31 மூட்டைகள்) என்று கணக்கிடப்பட்டது.

வரவு:—1,102½ கிலோ (365 கிலோ கொண்ட 30 மூட்டையும் 22½ கிலோவும்).

| | ரூ. | பை. |
|---|---|---|
| மூட்டை ரூ. 60 வீதம் | 1,845 | 00 |
| கடலை செடியின் மதிப்பு | 30 | 00 |
| | 1,875 | 00 |
| செலவு | 533 | 00 |
| நிகர லாபம் | 1,342 | 00 |

## பாராட்டுகிறோம்

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர், தமது பிரத்தியேக முயற்சியால், 'கிராம நலம்' இதழுக்கு, 237 ஓராண்டு சந்தாதாரர்களை சேர்த்துள்ளார். ஏனைய ஆணையர்களும் பின்பற்றத் தக்க, சீரிய செயலினைச் செய்துள்ள திரு கே. எஸ். கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டுகிறோம்.




**கவிஞர் பேகன்**

[சீரணிப் படைத் தலைவன் தன் தோழர்கட்குச் சொன்ன வீரவுரையோடு இக்கவிதை அமைந்துள்ளது.]

[தனதானன தனதானன
தனதானன தனனு]

திரு நாட்டினை உருவாக்கிட
ஒருங்காகவே எழுந்திர் !
செயலாற்றலிற் பெருந்தானைபோற்
திறல் வாய்ந்தசீ ரணியீர் !

வரலாற்றினைத் தெரிந்தோரெலாம்
வளமான நம் பழைமை
வகையாவையும் உணர்வார்களே
வளர்ந்தோங்குக பெருமை !

சிறந்தோங்கிடும் படைச்சீரணி
குறிக்கோளின் உறுதி
செறிந்தோங்கிடப் புதிதாம்பணி
தினந்தோறுதாம் புரிவோம்.

அறமே வழி ! அறிவே துணை !
அறிஞர் சொலே படையாம் !
அயரோமினி ஒரு நாழிகை
அரும் நாட்டினைச் சமைப்போம் !

உழவே தலை ! தொழிலே உரம் !
உயர்ந்தோங்கிட உழைப்போம் !
உறுமேன்மைகள் உயர்கல்வியால்
உணர்ந்தோமிதை வளர்ப்போம் !

உழைப்பே பொருள் ! பொருளே வளம் !
வளமே அரண் ! உணர்வீர் !
உலகாண்டிட விழைவீரெனில்
உழைப்பீர் நலம் வளர்ப்பீர் !

பழைமையெனும் இருட்காட்டில்நாம்
பதுக்குங்கனற் பிழம்பே !
பகலோனென ஒளிர்வோம். குறை
பரவ உலக களைப்போம் !

தொழுவோம் தமிழ் ! வளர்வோம் இனி !
தொடுவோம் நிலாப் பறந்தே !
தொடர்ந்தே பணி புரிவோம் இனி
துடித்தெங்கணும் எழுந்தே.

உண்மை இந்தியா இது அல்ல! அந்த இந்தியா இருளில் நெளிகிறது—வறுமையில் உழல்கிறது என்று கூறினோம்! உண்மையைக் கூறினோம்!

தெளிவு பெறும் நன்னாள்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆன பிறகு, 'நாமும் சில புதிய வளங்கள் பெற்றுள்ளோம்" என்பதை மட்டும் எடுத்துக்காட்டினால் இப்போது அழைப்புவேறெவருக்கு விடுத்திட வேண்டும்—இன்று எத்தகைய செயல் வீரர் தேவை—என்பது பற்றிச் சிந்தித்திட வேண்டும்.

மறைந்த லால்பகதூர் "மறவர் வாழ்க, உழவர் வாழ்க" என்று முழங்கினர்.

## புதுவாழ்வு, புது வளம், ஒரு புறம்

'இது போதுமா?' என்ற கேள்வியும் 'சாமானியர்களின் வாழ்வு செம்மைப்பட்டதா?' என்ற கேள்வியும் எழத்தானே செய்யும்? பிறர் கேட்பானேன்—நாமே நம்மைக் கேட்டுக்



கொள்ளவேண்டிய கேள்வி அல்லவா அது? அந்தக் கேள்வியைக் கேட்டு பதிலறிந்து தெளிவும் ஆர்வமும் பெற்றுப் பணியாற்ற வேண்டும் மென அழைப்பு விடுத்திடும் நன்னாள்—ஆகஸ்டு பதினைந்து.

பெற்ற சுதந்திரத்தைப் பிறநாட்டவன் எவனும் அழித்திட முனைந்திடில், அவனை அழித்தொழித்து நாட்டின் மானத்தையும் சுதந்திரத்தையும் பாது காத்திடபடை வீரர் தேவை—நிரம்ப உளர்—தமது ஆற்றலையும் உலகுக்கு எடுத்துக்காட்டி அழியாப்புகழ்பெற்றுக் குவித்தனர்.

குமுறும் உள்ளத்தின் கேள்வி

அந்நியரால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட கொடுமையானது 'சுதந்திரம் வந்து நாம் கண்ட சுகம் என்ன' என்ற சலிப்பு உணர்ச்சி! அந்த சலிப்புணர்ச்சி வாழ்வில் வளம் காணுதோருக்கு எழத்தான் செய்யும்.

"அந்நியர் சுரண்டுகின்றனர்—நாம் அவதிப்படுகின்றோம்! அவர்கள் பருகுவது இனிப்புச் சாறு! நமக்குக் கிடைப்பதோ வெறும் சக்கை! அவர்களுக்குச் சிங்கார மாளிகை. செல்வமினுக்குகள்—நமக்கோ ஓட்டைக் குடிசை—ஒடிந்த வாழ்வு" என்று ஏழை எளியோர் குமுறிடும்போது சோதனைக்கு இடையிலேயும் ஒரு நம்பிக்கை தவழ்ந்திட முடிந்தது—அந்நிய ஆதிக்கம் அகற்றப்படுமானால் அக்கிரமம்

## கூரைகள், குமுறிக் கிடக்கும் மக்கள், மறுபுறம்

அஞ்சா நெஞ்சினரே! அனைத்தையும் இழந்தேனும்—சுதந்திரம் பெற்றுத் தீருவோம் என்ற உறுதி கொண்டாரே! தியாகச் செம்மல்களே! வாரீர்! நாட்டு விடுதலைக்காக அறப்போர் நடாத்திட வாரீர்! என்று சுதந்திரப் போராட்டத்துக்கான அழைப்பைக் காந்தியடிகள் விடுத்தார். மக்கள் திரண்டெழுந்தனர்—போர்த் தொடுத்தனர். வெற்றி கண்டனர்! அழிந்துபடும். நீதி நிலைத்திடும். நிம்மதி பிறந்திடும் என்ற நம்பிக்கை.

சுதந்திரம் கிடைத்தான பிறகு 'வலியோர் சிலர் எளியோர்தமை வதை புரிவதும் இருந்துவரின், வேதனையுடன், திகைப்பல்லவா மக்கள் உள்ளத்திலே கொதித்திடும்?

வந்த சுதந்திரம் யாருக்கு? நமக்கு இல்லை போலத் தெரிகிறதே? நமது வாழ்விலே எந்த



G. N.—6a

மாற்றமும் காணுமே என்ற கேள்விகள் மனதைக் குடையும்போது உள்ளம் எரிமலை யாகிவிடுமே!

பிறகு அமைதி எங்ஙனம் நிலைத்திடும்—சமூகக் கட்டுக்கோப்பு எப்படிக் கெட்டிப்படும்?

பெற்ற சுதந்திரம் ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும். நாட்டுச் செல்வமும் வளமும்

“வாழ்வு, உரிமை மட்டுமல்ல கடமையு என்பது எவரும் மறுக்க முடியாத பேருண்மை யாகும்.

கண்மூடிகளாக மக்கள் இன்னும் உள்ளனர் என்று எண்ணிக்கொண்டு உழைப்பின் பலனை வஞ்சகமாக சுரண்டி வாழ்பவர்கள் சுதந்திரத்தின் பகைவர்கள்;

## அல்ல நிலையை அகற்ற ..

ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும். பாடுபடுவது பலன் பெறுவதும் பொது நீதியாக இருந்திடவேண்டும். பாடுபட பல்லோர். பலனைப் பெற ஒரு சிறு பிரிவினர் என்ற நிலை இருத்தல் கூடாது என்ற பொது நீதி வெறும் நல்லுரையாக மட்டும் இருந்துவிடாமல், நடைமுறையாதல் வேண்டும். நாடு அப்போது தான் புத்தொளி பெற்றிடும்—புதுவாழ்வுபெற்றிடும்!

ஆகஸ்டு 15-ல் விழாக் கொண்டாடும்போது—நமது தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்திடும்போது—காண்போர் அனைவரும், இது தமது உரிமைக் கொடி, சமத்துவக் கொடி, சமதர்மக் கொடி என்ற பெருமிதம் கொண்டிடும் நிலையைப் பாடுபட்டுப் பெற்றாக வேண்டும்.

இந்தத் தூய பணிக்காகத் தம்மை ஒப்படைக்கக்கூடிய ஆடவருக்கும், ஆரணங்குகளுக்கும், நாட்டின் சார்பில் அன்பழைப்பு விடுத்திடும் அருமைத் திருநாள்—ஆகஸ்டு பதினைந்து.

நாட்டுவளம் பெருக்கிட உழவர் பெருமக்களும் தொழிலாளத் தோழர்களும் அணி திரண்டு நின்றிடவேண்டும். உற்பத்தியைப் பெருக்கிட

உழைப்பு—மிகுந்த பலனை தந்திட, தொழில் உலகில் அமைதி நிலவிட வேண்டும்



—அமளியற்ற நிலைவேண்டும். மனித சக்தியாயினும் இயந்திரத்தின் சக்தியாயினும் முழு அளவில் பயன்படும் வழிகாணவேண்டும்.

## அனைவரும் பாடுபடுவோம் வாரீர்!

வேண்டும். நாட்டுச் செல்வம் மிகுந்திட வேண்டும்.

### உரிமையும் கடமையும்

அந்தத் தூயவர்களின் உழைப்புக்கு ஏற்ற வண்ணம், அவர்களின் வாழ்வு செம்மைப்பட வேண்டும். அதற்கான சமூக நீதி நிலைத்திட வேண்டும்.

மக்கள் தொகை எவரையும் மருட்டும் அளவுக்கு வளர்ந்து கொண்டே போகும். நமது நாட்டில், உற்பத்தியின் அளவு முறை—வகை—திறன்—தரம் எனும் எதிலேயும் குந்தகமோ, குலைவோ, குறையோ ஏற்பட்டு விட்டாலும், அடிமைத்தனத்தின்போது அனுபவித்த அல்லலையும் மிஞ்சியதான அல்லல் நம்மைத் தாக்கும்.

[44-ம் பக்கம் பார்க்க.]



1.



2.








3.

படம் 1. மருத்துவ நிலையம் அமைப்பதற்கான சிரணிப் பணியை சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் (மதுரை மாவட்டம்) 4–7–1968 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

படம் 2. திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுமலை பழையூர் கிராமத்தில் கட்டப்படவிருக்கும் தொடக்கப் பள்ளிக்கட்டிடத்திற்கு சிரணித் தொண்டர்கள் ஆற்றும் அரும்பணி.

படம் 3. மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கே. புதூர் கிராமத்தில் கல்குளம் கண்மாயை சிரணித் தொண்டர்கள் தூர் எடுத்து, குளக் கரையை உயர்த்தி, பலப்படுத்தும் பணியில், மதுரை வருவாய்க் கோட்ட அதிகாரி திரு எஸ்.டி. காசிராஜன் அவர்கள் பங்கு பெற்ருர்.

படம் 4. பூவானந்தபுரம் (சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம்) வாய்க்காலை செம்மைப்படுத்தும் பணியில், சிரணியர் ஈடுபட்டுள்ள காட்சி.

படம் 5. ஒடைப்பட்டி தம்பிரான் ஊத்து ஊரணியை, தூர் எடுக்கும் பணியில் 24–6–1968-ல் சிரணித் தொண்டர்கள் ஈடுபட்டனர்,

4.





5.



படம் 1. விவசாயிகளுக்கு உதவும் கடன் திட்டம் ஒன்றை, காஞ்சிபுரம் அருகிலுள்ள வாலாஜாபாத்தில் இயங்கும் சிண்டிகேட் பேங்க் உருவாக்கியுள்ளது. அக்கடன் தொகைகளை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21-7-1968 அன்று வழங்கினார். விழாவிற்கு மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் தலைமை வகித்தார்.




படம் 2. சீரணியின் திருப்பணியாக வெட்டன் விடுதியில் (கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம்) கட்டப்பெற்ற பள்ளிக்கட்டிடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் 7—7—1968 அன்று திறந்து வைத்தார்.



படம் 3. தமிழகத்தில் சிறந்த கிராமமென இரண்டாவது பரிசுபெற்ற அனந்தலை ஊராட்சியின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் (கட்டுரை இந்த இதழில்....)



படம் 4. ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 'அதிகாரி கண்மாய்'க்கு, கால்வாய் வெட்டும் பணியை சீரணித் தொண்டர்கள் மேற்கொள்ளும் காட்சி.



படம் 1. மகுடஞ்சாவடி, சேலம் மாவட்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுண்ட மேட்டுப்புதூர் துவக்கப் பள்ளி கட்டிட திறப்பு விழாவில் (1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 6-ம் நாள் அன்று) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், வீரபாண்டி சட்ட மன்ற உறுப்பினர் திரு எஸ் ஆறுமுகம் ஆகியோர்.

படம் 2. அனைத்திந்திய நிர்வாகச் சீரமைப்புக் குழுத் தலைவர் திரு கே. ஹனுமந்தையா மற்றும் உறுப்பினர்கள், தமிழக முதலமைச்சர் அவர்களையும், மற்ற அமைச்சர்களையும், தமிழகத் தலைமை அலுவலகத்திலே 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாளன்று கலந்துரையாடினர்.



படம் 3. முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கைத் திட்டத்தின்படி, காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்ப்புதூர் கிராமத்தில் அமைக்கப்பட்ட, சமுதாயக் கிணற்றை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் திரு சு. மீனாட்சி சுந்தரம் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளன்று தொடங்கி வைத்தார்.



படம் 4. கும்மிடிபூண்டியில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் மறுவாழ்வு முகாம்களை மத்திய அரசு அகதிகள் மறுவாழ்வுத் துறை துணை அமைச்சர் திரு டி. ஆர். சவ்ான் (இடது) 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாள் அன்று பார்வையிட்டார். அமைச்சருடன் தமிழக அரசு உள்துறை செயலாளர் திரு ஏ. வெங்கடேசன் ஐ.ஏ.எஸ். அவர்களையும் காணலாம்.















படம் 1. இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளரிவெள்ளியில் ஊராட்சி பொது மதிய உணவு மையத் திறப்பு விழாவின்போது, சீரணிப் படையினர் எச். பி. 1 கம்பு நாற்று நடுதலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கண்டு மகிழ்ந்தார். அமைச்சருக்கு அருகில், இடைப்பாடி தொகுதி, சட்ட மன்ற உறுப்பினர் திரு அ. ஆறுமுகம், பனமரத்து பட்டி தொகுதி, சட்ட மன்ற உறுப்பினர் திரு டி. பொன்னுமலை ஆகியோர்.

படம் 2. பொது மதிய உணவு மையத்திற்கு பொதுமக்கள் அளித்த ரூ. 1,200 மதிப்புள்ள மதிய உணவுக்கான பாத்திரங்கள்.

படம் 3. வெள்ளரிவெள்ளி ஊராட்சியின் பொது மதிய உணவு மையத் திறப்பு விழாவில் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாள் அன்று எச். பி. 1 கம்பு நாற்று நட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நீர்பாய்ச்சுதல். அருகில் திரு டி. பொன்னுமலை (பனமரத்துப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்).

படம் 4. வெள்ளரி வெள்ளியில் பொது மதிய உணவு தோட்டத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர்

படம் 5. கோனேரிப்பட்டி மீன்பண்ணை துவக்க விழாவில் இடைப்பாடி ஒன்றியத் தலைவர் திரு செல்லப்பன் உரையாற்றுகிறார்.



# பொது மதிய உணவு மையம்

"கண்ணுடையார் என்பவர் கற்றோர்" என்ற பொய்யா மொழிக்கிணங்க, மக்களை அறிவுசால் மக்களாக்கிடும் கல்விக்காக, தமிழக அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. செவிக்கு உணவாகிய கல்வியைப் புகட்டி, அதே நேரத்தில் தோன்றும் வயிற்றுப் பசி போக்க அமுதமாகிய மதிய உணவையும் கொடுத்துத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் நமது அரசு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எல்லா பள்ளிகளுக்கும் ஒரு பொது மதிய உணவு மையம் அமைக்க 15—3—68-ஆம் தேதிய கடிதம் எண் 97971-இ 8/67–11-ல் ஓர் ஆணையிடுவதற்கு முன்பே, சோதனை முயற்சியாக சேலம் மாவட்டம் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைக்கப்பட்டதே, வெள்ளரி வெள்ளி ஊராட்சி பொது மதிய உணவு மையமாகும்.

ஊராட்சி நிதி நிலையில் பெரும் பகுதி மதிய உணவிற்குச் செலவாகுவதைத் தவிர்க்கவும், தரமான சத்துள்ள உணவைச் சிக்கனமாக சமைத்து வழங்குவதும்தான், பொது மதிய உணவு மையத்தின் குறிக்கோள்களாகும்.

வெள்ளரி வெள்ளி எல்லையில் உள்ள 9 பள்ளிகளில் மதிய உணவு பெறும் மாணவர்கள், மற்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஊராட்சி செலவிடும் தொகை, அதன் வருட வருமானத்தில் மிக கணிசமானதாகும்.

| வரிசை எண்ணும் பள்ளியின் பெயரும். | படிக்கும் மாணவர்கள். | மதிய உணவு பெறும் மாணவர்கள். | ஆகும் செலவு. அரசினர் மானியம். | ஆகும் செலவு. ஊராட்சி பங்கு. | வெள்ளரி வெள்ளியிலிருந்து பள்ளி உள்ள தூரம். |
|---|---|---|---|---|---|
| (1) | (3) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூபாய். | ரூபாய். | மை. பர். |
| 1 வெள்ளரிவெள்ளி .. .. .. | 378 | 96 | 1,152 | 768 | .. |
| 2 மாக்கனூர் .. .. .. .. .. | 76 | 19 | 300 | 200 | 2—4 |
| 3 கல்லபாளையம் .. .. .. .. | 80 | 25 | 228 | 152 | 1—3 |
| 4 ஊமையகவுண்டனூர் .. .. .. | 41 | 15 | 180 | 120 | 1—0 |
| 5 புதுப்பட்டி .. .. .. .. .. | 46 | 10 | 120 | 80 | 2—0 |
| 6 சுள்ளிமுள்ளூர் .. .. .. .. | 53 | 15 | 180 | 120 | 1—4 |
| 7 குஞ்சாம்பாளையம் .. .. .. .. | 84 | 20 | 264 | 176 | 1—4 |
| 8 வேப்பமரத்துப்பட்டி .. .. .. | 36 | 22 | 240 | 160 | 1—0 |
| 9 வேட்டுவப்பட்டி .. .. .. .. | 53 | 20 | 240 | 160 | 1—0 |
| மொத்தம் .. | 847 | 242 | 2,904 | 1,936 | |

[படங்கள் : எதிர்பக்கத்தில்]

இவைகளுக்காக உணவு தயாரிக்க ரூ. 3,000 செலவில், ஒரு சமையலறையும், கிடங்கும் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கெனவே வேலை செய்து வரும் பள்ளி சேவகியைச் சமையல் வேலைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மையத்திற்காக ஊர்ப் பொது மக்கள் தங்கள் மேலான ஆதரவைத் தெரிவித்தும், ரூ. 1,200-க்கு மதிப்பான சமையல் பாத்திரங்கள், உணவு எடுத்துச் செல்ல பாத்திரங்கள், சாப்பிடும் தட்டுகள் முதலானவைகளை நன்கொடையாகயளித்தும், சமையல் கூடத்திற்குத் தங்கள் செலவில் மேல் நிலை குடிநீர் தொட்டியிலிருந்து குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வரவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

### மதிய உணவு வழங்குதல்

தூரமுள்ள பள்ளிகளுக்கு உணவு வழங்குவதன் பொருட்டு ரூ. 300 செலவில் ஒரு மிதிவண்டி வாங்கப்பட்டுள்ளது. தோட்டத்திற்குத் தோட்டக்காரனை நியமனம் செய்து, இதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. வெள்ளரிவெள்ளி உயர் துவக்கப் பள்ளி கடை நிலை ஊழியரும், சமையல் வேலைகளை முடித்த பின் பள்ளி சேவகியும் அருகிலுள்ள பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படுகின்றனர். உணவு, தட்டு மூலம் வைத்துப் பூட்டப்பட்டு வெள்ளரிவெள்ளி மதிய உணவு மையச் செலலாளரான தலைமையாசிரியரிடம் ஒரு சாவியும், சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியரிடம் ஒரு சாவியும் கொடுக்கப்பட்டு மிகப் பத்திரமாக விநியோகிக்கப்படுகிறது.

### மதிய உணவிற்கான தோட்டம்

மதிய உணவிற்கான தானியங்களையும், காய்கறிகளையும் நாமே சிக்கன முறையில் உற்பத்தி செய்து, நன்முறையில் இயக்கிவர, பள்ளிக்கு அருகில் பயிர் செய்ய, லாயக்கில்லாத 5·59 ஏக்ரா பரப்புள்ள 587/4, 587/3, 587/8-ஏ, என்ற சர்வே எண்ணுள்ள மந்தவெளி இடத்தைக் தேர்ந்தெடுத்து, அங்குள்ள முட்புதர்கள், பாறுங்கல், சரளைகள் இவைகளை அப்புறப்படுத்தி, ரூ. 3,000 செலவில் காடு திருத்தி கழனியாக்கப்பட்டது. பயனற்ற முட்புதர்கள் யாவும் மதிய உணவு சமையலுக்காகப் பயன்படுத்தப்பட்டு, இதுவரை விறகு விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லாமற் செய்துவிட்டது. நிலத்தினைச் சுற்றி இரு பக்கங்களிலும் வேலி கட்டி, உயிர் வேலியும் போடப்பட்டது.

தோட்டத்தில் வடபுறத்தில் உள்ள கிணற்றை ரூ. 3,000 செலவில் ஆழப்படுத்தி, பொது மக்கள் நன்கொடையாகவும், ஊராட்சி துணையோடு அளித்த பம்ப் செட் ஒன்றையும் பொருத்தி தோட்டத்திற்கு, 560 அடி நீளம் சிமெண்ட் குழாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்ச வசதியளிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கு அருகிலுள்ள கிணறு ரூ. 3,000 செலவில் அகலப்படுத்தி, ஆழப்படுத்தப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிக்குப் பம்ப் மூலம் நீர் இறைக்க மின் சாதனமும் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விரு கிணறுகளிலிருந்தும் கிடைக்கும் நீர், பம்ப் செட் மூலம் தோட்டத்திற்கு வருடம் முழுவதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி, ஊராட்சி அலுவலகம், போன்ற கட்டிடங்கள் போக மீதம் 5 ஏக்கராவில் முதற் கட்டமாக வீரிய கம்பு 0·20 சென்டிலும், தென்னங் கன்றுகள் 100-ம், பசுந்தாள் உரச் செடிகளும், முருங்கை மரமும் வைக்கப்பட்டு மீதி நிலத்தில் சோளமும் பயிராக்கப்பட்டுள்ளன.

தோட்டத்தில் ஆகும் செலவும், வருமானமும், வருமாறு :—

### முதல் போகம்

| வருமானம் | | செலவு. வேலை விவரங்கள். | செலவின் மதிப்பு. ரூ. | சீரணித் தொண்டரின் பங்கு. |
|---|---|---|---|---|
| 1 மகசூல் ஓர் ஏகராவிற்குச் நெல் சுமார் 20 மூட்டைகள் வீதம் 4 ஏகராவிற்கு (மூட்டை 1க்கு ரூ.50வீதம்). | 4,000 | 1. நாற்றங்கால் தயாரித்தல். | 5<br>80 | சீரணித் தொண்டர்களைக் கொண்டு செய்தல். |
| | | 2. விதைகள் .. .. | 80 | .... |
| | | 3. நடவு வயல் தயாரித்தல். | 400 | விசை உழவு கருவிகொண்டு செய்தல். |
| 2 வைக்கோல் பில் .. .. | 500 | 4. எரு, எரு இடுதல் .. | 550 | எரு இடுதல் 15 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல்—3 நாட்கள். |
| | 4,500 | | | |
| | | 5. நடவு .. .. .. | 80 | 15 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல்—4 நாட்கள். |
| | | 6. பயிர்ப் பாதுகாப்பு .. | 50 | 2 சீரணித் தொண்டர்கள் 2 நாட்கள். |
| | | 7. நீர் இறைத்தல் .. | 300 | .... |

| | | | |
|---|---|---|---|
| 8. களை எடுத்தல் | .. .. | 50 | 10 சீரணித் தொண்டர்கள் 4 நாட்கள். |
| 9. அறுவடை | .. .. | 150 | 15 சீரணித் தொண்டர்கள் 4 நாட்கள். |
| 10. மொத்த செலவு | .. | 1,930 | |
| சீரணித் தொண்டர் மூலம் செய்த வேலையின் மதிப்பை கழிக்க. | | 410 | |
| நிகர செலவு | .. | 1,520 | |
| நிகர லாபம் | .. | 2,980 | |

### இரண்டாம் போகம், மூன்றும் போகம்.

| வருமானம். | செலவு. வேலையின் விவரங்கள். | செலவினங்கள். | சீரணித் தொண்டர்களின் பங்கு. |
|---|---|---|---|
| 1 மகசூல் ஓர் ஏக்கருக்கு சுமார் 17 மூட்டைகள் வீதம் 4 ஏக்கருக்கு 68 மூட்டைகள் (நெல்) மூட்டை ஒன்று ரூ. 50 வீதம் 68 மூட்டைக்கு. 3,400 | 1. நாற்றங்கால் தயாரித்தல். | 80 | 5 சீரணித் தொண்டர்களை கொண்டு செய்தல். |
| | 2. விதைகள் .. .. | 80 | .... |
| | 3. நடவு வயல் தயாரித்தல். | 300 | விசை உழவு கருவிகொண்டு செய்தல். |
| | 4. எரு. எரு இடுதல் .. | 450 | எரு இடுதல் 15 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். 3 நாட்கள். |

45-ம் பக்கம் பார்க்க.


பயனுள்ள ஒரு திட்டமும், தேவையான வழிவகையறிவும், அதற்குரிய திறமையும் உங்களிடம் இருக்குமேயானால்



சொந்தமாக உங்கள் சிறுதொழிலைத் துவக்கிக்கொள்ள நாங்கள் நிதி உதவி வழங்குகிறோம்!

மேற்கொண்டு தகவலறிய, அருகிலுள்ள ஸ்டேட் பாங்க் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளவும்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

வெற்றி மாளிகையின் வாயிலிலே—17-ம் பக்கத் தொடர்ச்சி.

பதவிக்குப் புதிதாக வருபவர் ஒவ்வொருவரும் தனக்கு முன்பு இருந்தவரைவிடதான் புதிதாக எதையாவது செய்யவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருப்பார்கள் என்றும் அதை அரசினர் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு அவர்கள் மூலம் அதிக பயன் கிடைக்க உற்சாகப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இம்மாவட்டம் செய்துள்ள வேலைகளை பின்கண்ட புள்ளிவிவரங்களே விளக்கும்.

**ஓர் ஆண்டில்.**

| | |
|---|---|
| அரிஜனங்களுக்காக தண்ணீர் வழங்கும் தொட்டிகள். | 32 |
| குடிதண்ணீர் வழங்க மேல்தள தொட்டிகள். | 40 |
| கட்டப்பட்டப் பள்ளிக்கூடங்கள். | 76 |
| விவசாயக் கிடங்குகள் .. | 17 |
| கால்நடை மருத்துவ மனைகள். | 2 |
| ஊராட்சிக் கட்டிடங்கள். | 22 |
| தாய்சேய் நல விடுதிகள். | 5 |
| ஆசிரியைகளுக்கு விடுதிகள். | 5 |
| சீரணிப்படையினர் செய்துள்ள பணிகள். | 35 |

**1967–68-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்.**

| திட்டத்தின் பெயர். | வேலைத்திட்ட எண்ணிக்கை, | முடிந்த வேலைகள். | பாக்கியுள்ளவை. |
|---|---|---|---|
| சாதாரணக் கிணறு திட்டம் .. .. | 496 | 347 | 149 |
| குழாய் அமைத்து தண்ணீர் வழங்கல் .. | 96 | 29 | 65 |
| பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | 244 | 91 | 193 |
| இணைப்புச் சாலைகள் .. .. .. | 516 | 322 | 195 |
| உள்ளூர் சாலைகள் .. .. .. | 271 | 192 | 79 |
| உள்ளூர் பாசனம் .. .. .. | 620 | 417 | 203 |
| முள்ளுள் மின் பகுதி வேலைகள் .. | 194 | 156 | 38 |
| ஆசிரியைகள் விடுதிகள் .. .. | 9 | 5 | 4 |
| | 2505 | 1590 | 915 |

சோழவரம் பகுதியில் மட்டும் சீரணிப்படையினர் 22 திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். படப்பையில் மிகக் குறைந்த காலத்தில் ஒரு பள்ளிக் கட்டிடம் சீரணிப்படையினரால கட்டப்பட்டுள்ளது.

---

## தமிழக உழவரின் சாதனை

21-ம் பக்க தொடர்ச்சி.

அத்தோடு இந்த நெல்லை நான் பயிர் செய்ததில் தெரிந்துகொண்டது; கதிர் அறுவடை செய்ததற்கு நான்கு நாட்களுக்கு முன்பு வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான் கதிர் அறுவடை செய்வதற்கு 15 தினங்களுக்கு முன்பே சாதாரண நெல்லுக்கு தண்ணீரை நிறுத்தியது போல் நிறுத்திவிட்டதால் அதிக பதராகிவிட்டது.

ஆதலால் இந்த ஐ. ஆர். 8 நெல்லை விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் தொகுதியிலுள்ள கிராம சேவக், விவசாய வளர்ச்சி அதிகாரியின் ஆலோசனையை அடிக்கடி கேட்டுக்கொண்டால், கட்டாயம் 4,000 கிலோ வரை மகசூல் சாதாரணமாக பெறலாம். அடுத்த தடவை இந்த ஐ. ஆர். 8 நெல்லைச் சாகுபடி செய்து 5,000 கிலோவிலிருந்து 6,000 கிலோ வரை மகசூல் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆதலால் நான் கடைசியாக கூறிக் கொள்வது எல்லா விவசாய நண்பர்களும் இந்த அமோக விளைச்சல் தரும் ஐ. ஆர். 8 நெல்லை நவீன முறையில் சாகுபடி செய்யவேண்டும் அதனால் நமது நாட்டின் பசிப்பிணி அறவே ஒழிந்து போகும்.

FDSEID 968



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

கூட்டுறவே நாட்டுயர்வு !

A - 1928

## ஒட்டன்சத்திரம் "கற்பகத்தரு" நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

ஒட்டன்சத்திரம்.

ஒட்டன்சத்திரம் அஞ்சல். பழனி வட்டம். மதுரை மாவட்டம்.

எங்கள் சங்கத்தில்

20S, 50×4×8; 4×9 சன்னக்கரை, பெரியகரை வேட்டி மடிகளும்,
,, 33×4×6×4×7×4×8 துண்டு மடிகளும்,
,, 26×4×6; 4×5 துவாலே மடி ரகங்களும்,
,, மலபார் ரக துண்டு மடிகளும்,
50×1×12 காடா & கலர் பீஸ்களும்,
50×4×8; 1×2 டைமன் வேட்டி ரகங்களும்

மொத்தமாகவும், சில்லரையாகவும் அரசினர் தள்ளுபடி கழித்து கிடைக்கும்.
எங்களது தயாரிப்பு ரகங்கள்
எல்லா Co-optex விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

மு. சுப்பய்யா முதலியார்,
தலைவர்.

# மதுரை மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம்

வரையறுக்கப்பட்டது ஏ. 1437 மதுரை.

31, வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.

தபால் பெட்டி எண் 118 — தந்தி விலாசம்: கோஷோல்சேல்.

தொலைபேசி எண் 2166

இச்சங்கம் அரசின் ஏஜண்டாக இருந்து, மதுரை மாவட்டம் முழுவதும் இரசாயன உரம் வினியோகம் செய்கிறது.

எங்கள் சங்கத்தில், நெல், கரும்பு, வாழை, மிளகாய், நிலக்கடலை, மற்றும் இதர பயிர்களுக்கு ''புரு மார்க்'' கலப்பு உரங்களைத் தயார் செய்து வினியோகம் செய்கிறோம். எங்கள் கலப்பு உரம் நல்ல பயனைத் தரவல்லது. கூட்டுறவுச் சங்கங்களும், விவசாயிகளும் தங்களது தேவைக்கு எங்கள் "புரு மார்க்" கலப்பு உரத்தையே வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

வே. ஆ. இராமையா,
துணைப்பதிவாளர்-இணைச்செயலாளர்,

எஸ். வைத்தியலிங்கம்,
துணைப்பதிவாளர்/தனி அதிகாரி.

''ஆடுதுறை 27 நெல் ரகம்—பணத்தோட்டம்'' என்று ''பஞ்சாயத்து ராஜ்'' இதழ் தமிழகத்து நிகழ்ச்சி ஒன்றுக்கு தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டுள்ளது. அந்தக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது:




**1965-ம்** ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.

தமிழகத்திலுள்ள தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள விளாகம் என்னும் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி திரு எஸ். இராமலிங்கம் அவருடைய நண்பர்கள் தங்கள் மாவட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் ஆடுதுறை 27 புதிய நெல் ரகத்தைப் பற்றி அவரிடம் சொன்னார்கள்.

இராமலிங்கத்தின் நண்பர் ஒருவர் தஞ்சைமாவட்டத்திலுள்ள கும்பகோணம் வட்டத்தைச்சேர்ந்தவர் ஆடுதுறை 27 நெல் ஓர் ஏக்கருக்கு 50 மூட்டைகளுக்கு மேலாக—அதாவது 3000 கிலோகிராமுக்கு மேலாக விளைச்சல் தருவதாக தெரிவித்தார்.

அறுவடைக்கு முன்பு நண்பருடைய கிராமத்திற்குச் சென்று ஆடுதுறை 27 நெல் விளைச்சலைப் பார்த்தார், பார்த்தவுடனேயே அடுத்த ஆண்டு சாகுபடி செய்ய 10 மூட்டை விதை நெல்லை நண்பரிடம் வாங்கிவந்தார்.

தென்னார்க்காடுமாவட்டத்தில் புதிய ரக நெல்லை சாகுபடிசெய்த கிராமங்களில் விளாகம் ஒன்று.

விளாகத்திற்கு பாசன வசதி வீராணம் ஏரியிலிருந்து கிடைக்கிறது. இங்கு 300 ஏக்கர் நிலம் சாகுபடி செய்து வரப்படுகிறது. ராமலிங்கம் ஆண்டுதோறும் 20-லிருந்து 30 ஏக்கர் நிலம் வரை ஆடுதுறை நெல்லை சாகுபடி செய்து வந்தார். இதை கண்ட மற்ற விவசாயிகளும் படிப்படியாக ஆடுதுறை 27 நெல் ரகத்தைப் பயிரிட தொடங்கிவிட்டனர்.

திரு ராமலிங்கம்ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்யும் பொழுது விவசாயத் துறையினர் ஆலோசனைகளை மிகுந்த கவனத்துடன் கடைப்பிடித்தார். நாற்றங்கால்தயாரிப்பு நடுகை வயலைப் பக்குவபடுத்துவது—காலத்தில் உர மிடுதல்—பயிர்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல் முதலிய முறைகளை கடைப்பிடித்தார்.

### கற்பகத் தரு

அதன் விளைவு—ஆடுதுறை 27 நெல்—கற்பகத் தருவாகிவிட்டது, அவருக்கு கடந்த ஆண்டு 25 ஏக்கர் நிலத்தில் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்தார் ராமலிங்கம் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 60 கிலோ கொண்ட 45 மூடைகள் விளைந்திருந்தது.

சாகுபடி செய்ய ஓர் ஏக்கருக்கு ராமலிங்கத்திற்குச் செலவான தொகை ரூ. 400. ஆனால் ஓர் ஏக்கரில் விளைந்த நெல்லை விற்றதில் கிடைத்த பணம் ரூ. 1,200. ஓர் ஏக்கருக்கு மட்டும் அவருக்கு கிடைத்தலாபம் ரூ. 800

நானூறு ரூபாய் செலவு செய்தால் எண்ணூறு ரூபாய் லாபம் அதுவும் 105 நாட்களில், ஆடுதுறை 27 நெல் சாகுபடி மூலமாக.

பிறகு ஏன், ராமலிங்கம் ஆடுதுறை 27 நெல் ரகத்தை பணத்தோட்டம், கற்பகத்தரு என்று சொல்லமாட்டார்?

## புதிய முயற்சி

# நாட்டுக்கு நல்வழி காட்டும் கேரள மாணவர்கள்

''செப்டம்பர் திங்களில் வரும் ஓணம் திருநாளுக்குள் ஒவ்வொரு மாணவனும் ஒரு பரா நெல் உற்பத்தி செய்யவேண்டும்''.

இந்த முழக்கத்தை கேரள மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாணவனும் முழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

'பரா' என்பது எட்டு கிலோ நெல்லுக்கு சமமான கேரள மாநிலத்தில் வழங்கும் அளவு முறையாகும்.

ஒவ்வொரு மாணவனும் நெல் உற்பத்திச் செய்ய வேண்டும் என்ற கருத்து கேரளம் முழுவதும் பரவி யிருக்கிறது. எல்லா மாணவர்களும் ஓணம் திருநாளுக்குள் ஒரு பரா நெல்லை உற்பத்தி செய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் நெல் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மாணவர்கள் அமைப்பு கள் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

மிகு விளைச்சல் தரக்கூடியரகமான ஐ.ஆர்–8 நெல் அடங்கிய இரண்டு லட்சம் பொட்டலங்கள் கேரள மாநிலம் முழுவதுமுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் ஆல்வேயில் உள்ள இரசாயன உரத் தொழிற்சாலையிலிருந்து (FACT) இந்தத் திட்டத் திற்காக உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் நெல் உற்பத்திச் செய்யும் இந்தத் திட்டத்தின் நோக்கம் மாணவர்கள் தங்கள் சொந்த உழைப்பினால் தங்கள் வீட்டுத் தோட்டத்திலோ சுற்றுப் புறத்திலோ, மொட்டை மாடியிலே, பூத்தொட்டிகளிலோ நெல்லை உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான்.

ஐ.ஆர்.–8 நெல் விதைகள் வளர்ச்சியடைய 120 நாட்கள் ஆகும். செப்டம்பர் மாதத்தில் மாணவர்களின் இந்தச் சாகுபடியால் குறைந்தது இரண்டு லட்சம் பரா நெல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களுடைய அமைப்புகள், கேரள மாநில பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் உழவர் சங்கங்களை அமைக்க முயற்சி செய்துகொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, சிறு நில உடைமையாளர்களுக்குரிய பிரச்னைகளைப் பற்றி மேலீடான ஆராய்ச்சி செய்யவும் அவர்களுடைய நிலங்களில் மண் வள சோதனை செய்ய உதவவும். மாணவர் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

# ஓர் உயிர்த் துணை



விவசாயிகளுக்குத் துணைசெய்கின்ற உயிர்ப் பிராணிகளில் நாயையும் முக்கியமான ஒன்றாகக் கருதலாம். கிராமங்களில் ஒவ்வொரு விவசாயியும் நாய் வளர்ப்பதைப் பலர் கண்டிருக்கலாம் வீட்டுக்கும், கால்நடை பண்ணைக்கும் காவலனாக இருந்து நாய் விவசாயிகளுக்குச் செய்யும் உதவி மிகப் பெரிதாகும் வயல்களில் ஆடுகளைக் கொண்டுபோய் "கிடை" போடும் வழக்கம் எல்லா இடங்களிலும் உண்டு. அந்த ஆடுகளை யாரும் திருடிச் சென்றுவிடாமலிருக்க விவசாயிகள் வயலில் போய்ப் படுத்துக்கொள்வார்கள். அவர்கள் வளர்க்கும் நாயும் அக்காவல் வேலையில் அவர்களுக்குப் பெருந்துணை புரியும். நாய்களின் உதவி இல்லையானால் இரவு நேரத்தில் ஆட்டுக் கிடைகளில் ஆடுகளைத் துன்புறுத்த வரும் ஓநாய், நரி முதலான விலங்குகளின் தொந்தரவையும், திருடர்கள் பயத்தையும் விவசாயிகள் பயத்தையும் விவசாயிகள் தவிர்ப்பது மிகக் கடினமாகிவிடும்.

வயல்களில் அறுவடை செய்த தானியங்களைக் காவல் புரிவதற்கும் நாய்கள் துணை புரிகின்றன. தானியங்களை வீட்டில் கொண்டுவந்து சேர்ந்த பிறகும் விவசாயிகள் திருடர்களுக்கு அஞ்சி எச்சரிக்கையாக வாழவேண்டியதிருக்கிறது. நரி முதலிய உயிர்ப் பிராணிகள் சில சமயம் ஊருக்குள் புகுந்து விவசாயிகளின் ஆடு, கோழி முதலியனவற்றைக் கவர்ந்து சென்று விடுவதுண்டு. விவசாயிகளின் வீட்டிலுள்ள நாய்கள் இப்படிப்பட்ட துன்பங்களிலிருந்து விவசாயிகளின் செல்வத்தைக் காக்கும்.

விவசாயக் குடும்பத்தினர் வயலில் வேலை செய்யும்போது தங்கள் குழந்தைகளையும் பொருள்களையும் மரத்தடியிலோ, தனியிடத்திலோ விட்டுச் செல்வதுண்டு. அப்போது நாய்கள் அவற்றின் அருகிலிருந்து காவல் காத்து உதவும். நாய்களுக்கு இருக்கும் மோப்பச் சக்தி காரணமாகச் சில கொடிய மிருகங்களின் சஞ்சாரத்தை அவைகள் சுலபமாக கண்டுகொள்கின்றன. நாய்களுக்கு நல்ல நினைவாற்றலும் உண்டு. இதனால் வீட்டிலும் வயலிலும் நாய்கள் விவசாயிக்குத் தக்க பாதுகாவலனாகவும், உயிர்த் தோழனாகவும் விளங்க முடிகிறது. விவசாயிகளுக்கு வயலில் வேலை அதிகமில்லாத கோடை மாதங்களில் முயல் வேட்டை முதலானவற்றிற்காக அவர் செல்வதுண்டு. அப்படி வேட்டைக்குச் செல்லும் காலங்களில் நாய்களையும் கூட்டிச் செய்வார்கள். வேட்டையின் போது நாய்கள் அவர்களுக்குப் பெருந்துணை புரியும்.

நாய் ஒரு நன்றியுள்ள பிராணி சில ஜாதி நாய்கள் பார்ப்பதற்கும் மிக அழகாய் இருக்கும். அதனுடைய எஜமான விசுவாசம், நன்றி மறவாமையும் கருதிப் பெரியவர்களெல்லாங்கூட அச்சிறு பிராணியின் சிறப்பை மிகவும் பலப்படப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். இலக்கியங்களில் நாயின் நன்றி மறவாமை மிகச் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

வெளிநாடுகளில் கிராமவாசிகள் நாய்களைச் சில சிறு சிறு வேலைகள் செய்யவும் பழக்கி வைத்திருக்கிறார்கள். சிறு வண்டிகளை இழுப்பதற்கும், காய்கறிக்கூடை முதலானவற்றைத் தூக்கிக்கொண்டு துணையாக உடன் வருவதற்கும், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குத் துணையாகச் செல்வதற்கும் குருடர்களுக்கு வழிகாட்டிச் செல்வதற்கும் நாய்களைப் பழக்கலாம்.

இப்படிப் பலவகையிலும் மனிதர்க்கு உதவக்கூடிய நாய்களைத் தெரிந்தெடுத்து வளர்ப்பதிலும் நாம் சில முறைகளை அனுசரிக்க வேண்டும்.

குழந்தைகளை நல்ல முறையில் சொல்லிக்கொடுத்து வளர்த்தால் எப்படி அவைகள் நாட்டிற்கு நல்ல குடிமக்களாக வளர்ந்து வாழ்வார்களோ அதுபோல நாய்களையும் நல்ல தரமறிந்து செவ்வையாக வளர்த்தால் அவைகள் அளவு கடந்த வேலைகளுக்கு உதவும்.

குட்டியாக இருக்கும்போது நாய்களை வளர்ப்பதில் சில சிரமங்கள் உண்டு, கண்ட இடத்தில் அவைகள் மலஜலம் கழிக்காதபடி முதலில் அவற்றிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். சிறிது அக்கறையோடு பயிற்சி அளித்தால் அவற்றைச் சுத்தமாக இருக்கும்படி எளிதில் செய்துவிடமுடியும். ஆகாரம் கொடுப்பதைக்கூட முறையான வேளையும், நேரமும் வைத்துக் கொடுத்து வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் உணவு கொடுப்பதென்று முறை வைத்துக்கொண்டால் சரியான நேரம் வந்ததும் நாய்கள் எஜமானை நினைவூட்டத் தொடங்கும், நாய் வளர்ப்பவர்கள் ஆரம்பத்தில் ஒவ்வொரு பிரச்சினையும் கருத்து

செலுத்தி ஒவ்வொரு காரியத்திலும் நன்றாக அவற்றைப் பழக்கிவிட்டால் பிறகு அவர்களுக்கு ஒருவித சிரமமும் இருக்கமாட்டாது. கெடிகாரம் தவறினாலும் மணியும் நேரமும் தவருதபடி நாய்கள் தனக்குரிய காரியத்தை அவ்வப்போது செய்யும்.

நாய்களை எந்த நேரமும் கட்டிப் போடாமல் சில நேரங்களில் அவிழ்த்துவிட்டுச் சுதந்திரமாகத் திரியவிட வேண்டும். நாய்கள் நல்லறிவுடைய பிராணிகளாக இருந்தாலும் அவற்றின் அறிவின் எல்லைக்கும் ஒரு வரையறை உண்டு. எனவே அவைகள் ஏதும் தவறு செய்தால் உடனே கோபங்கொண்டு அவற்றைத் துன்புறுத்திவிடக்கூடாது. ஈட்டியை வைத்துக் குத்தினாலும் எஜமானனிடம் வாலைக் குழைத்து நன்றியோடு நடக்கும் பிராணி நாய் ஒன்றுதான். வேறு எந்தப் பிராணிக்கும் இந்தக் குணம் கிடையாது. இந்தச் சிறந்த குணத்தை நாம் மிகவும் மதித்து நாய்களைத் துன்புறுத்தாமல் பேண வேண்டும்.

[மத்திய அரசு இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் செய்தி வெளியீட்டிலிருந்து.]

---

## மண் பரிசோதனை

"ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் கலப்பை செல்லும் ஆழத்திற்கு உள்ள மண்ணின் எடை சுமார் 20 லட்சம் இராத்தல் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல் ஓர் ஏக்கர் நிலத்தில் ஓர் இராத்தல் மண்ணைப் பரிசோதனைக்கென எடுத்தால் போதுமானதாகும். மாதிரிகளை எடுப்பதற்கு தகுந்த காலம் அறுவடைக்குப் பின் அல்லது நடவுக்கு முன் ஆகும். உரமிட்ட வயலில் மூன்று மாதத்திற்குள் மண் மாதிரி எடுக்கக்கூடாது."

## தெரியுமா?

"நம் நாட்டில் நாள்தோறும் பத்தாயிரம் ரயில்களுக்குமேல் ஓடிக்கொண்டிருக்கின்றன.

நாடு விடுதலை அடைவதற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது இருமடங்குக்குமேல் ரயில் பிரயாணிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது.

ரயில்கள் ஏற்றிச் செல்லும் சாமான்களின் அளவு 15 ஆண்டுகளில் இரு மடங்குக்குமேல் அதிகரித்திருக்கிறது.

ரயில்வே சாதனங்கள் எல்லாம் இப்பொழுது நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. வாகனங்களை ஏற்றுமதி செய்யவும் தொடங்கியுள்ளோம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ரயில்வே வளர்ச்சிக்கு சுமார் மூவாயிரம் கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது."

[மத்திய அரசு வெளியீட்டுத்துறையின் நல்வாழ்வை நோக்கி நமது ரயில்வே என்ற வெளியீட்டிலிருந்து.]

# அங்கும் இங்கும்

## "கிராமநலம்"
## துணுக்குகள்

### ஒட்டு ரகப் பயிர்கள்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஜல்கான் மாவட்ட பரிஷத் பகுதியில் உள்ள சுமார் 2,80,000 ஏக்கர் நிலத்தில் ஒட்டு ரக தானியங்களை பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென மத்திய கூட்டுறவு வங்கி ரூ. 85 லட்சம் நிதி உதவியளிக்க அனுமதி வழங்கியுள்ளது,

சென்ற ஆண்டு 40,000 ஏக்கர்களில் தான் ஒட்டு ரக தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. இவ்வாண்டு 1,75,000 ஏக்கரில் கேழ்வரகும் 90,000 ஏக்கரில் கம்பும், 15,000 ஏக்கரில் சோளமும் பயிரிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவற்றிற்குத் தேவையான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் அனைத்தும் இம்மாவட்டத்திலுள்ள 127 நிலையங்களின் வாயிலாக உழவர்களுக்கு வினியோகிக்கப்படும்.

### ஜம்மு— காஷ்மீரில் வேளாண்மை.

பொறுக்கு விதைகள், உரங்கள் போதிய மிகு பாசன வசதி ஆகிய வற்றை திறம்பட பயன்படுத்தியதில், உணவு உற்பத்தி நன்கு பெருகி யுள்ளது. 1951-52-ல் ஒரு ஹெக்டேரில் 8·69 குவிண்டால் அரிசிதான் கிடைத்தது. அது 1966-67-ல் 12·17, குவிண்டாலாக அதிகரித்-துள்ளது. இது தவிர சோளம், 4,80 குவிண்டாலிலிருந்து 9·23 குவிண் டாலுக்கும், கோதுமை 3·88 குவிண்டாலிலிருந்து 6·57 குவிண்டா லுக்கும் பெருகியுள்ளன.

மூன்றுவது திட்ட காலத்தில் 28,000 டன்கள் தான் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டன. அந்த அளவு 1967-68-ம் ஆண்டில், சுமார் ஒரு லட்சம் டன்னுக்கு அதிகமாகியுள்ளது. 1950-51-க்குப் பிறகு, மீன் உற்பத்தி ஏழு மடங்கிற்கு அதிகரித்துள்ளது.

# செய்தி பேழை

**ஆந்திராவில் ஒரு மாவட்டத்திலே 29,048 குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைகள்**

கிழக்கு கோதாவரி மாவட்ட (ஆந்திர மாநிலம்) த்தில் குடும்பக் கட்டுப்பாடு முகாம்கள, 1967-68-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. அவற்றின் பயனாக, 29,048 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் செய்யப்பெற்றன. ஆந்திர மாநிலத்திலேயே அதிகமான பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது இந்த மாவட்டத்தில் தான்.

# பிற மாநிலங்களில்...

**மேற்கு வங்கத்தில் கோதுமைப் பயிர்**

முர்சிதாபாத் மாவட்டத்திலுள்ள மாசிம்பூர் என்ற கிராமத்தில் பன்னெடுங்காலமாக நெற்பயிரே பயிரிடப்பட்டது. , ஆனால் திரு. பங்கிம் போஸ் என்பவர், உயர் ரக கோதுமை விதைகளைக் கையாண்டு ஓர் ஏக்கரில் 67·5 மணங்கு கோதுமையை மகசூல் செய்துள்ளார். 1967-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம நாள் அன்று விதைக்கப்பட்ட அப்பயிர், 1968 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25ம் நாள் அன்று, விவசாயத் துறை அலுவலர்கள் முன்னிலையில் அறுவடை செய்யப்பட்டது.

"பஞ்சாயத்து ராஜ்", "குருக்ஷேத்ரா" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை: பக்கங்கள் 19, 22 மற்றும் 35 முதல் 40 வரை.

Articles reproduced from "Krukshetra" on pages 19 and 22, and from "Panchayati Raj" on pages 35 to 40.

※ புதுக்கோட்டை நகராட்சி

※ தென்காசி நகராட்சி

※ வேலூர் நகராட்சி

※ கோவில்பட்டி நகராட்சி

※ இடைப்பாடி நகராட்சி

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## புதுக்கோட்டை நகராட்சி

வெளியூர் பயணிகள் புதுக்கோட்டை நகருக்கு வருகையில் தங்குதற்கு வசதியான 'பயணிகள் தங்கும் விடுதி' இல்லை என்ற குறையை போக்க, இந்நகராட்சி 'தங்கும் விடுதி' கட்டுவதற்கு நகரின் மையத்திலும், அலுவலகங்கள், கடைவீதி, பேருந்து நிலையம் இவற்றின் அருகிலும் உள்ள விசாலமான இடத்தை தேர்ந்தெடுத்து கட்டிடம் கட்டுவதற்காக சென்னை மாநில முன்னாள் ஆளுநர் உயர்திரு ஸ்ரீ பிரகாசா அவர்களால் 1954-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பின்னர், இரண்டு குடும்ப அறைகளும், ஆறு ஒருவர் தங்கும் அறைகளும் கட்டப்பட்டு, 'நகராட்சி சத்தியமூர்த்தி ஞாபகார்த்த தங்கும் விடுதி' என பெயரிடப்பட்டு நகராட்சி தலைவர் திரு க. தர்மராஜபிள்ளை அவர்களால் 1958-ம் ஆண்டு எப்ரல் மாதம் 14-ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. இதை கட்டி முடிக்க ரூ. 42,350—0, ஆகியது. இந்த அறைகள் எல்லாம் நவீன வசதிகளுடன் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

போதுமான தங்கும் அறைகள் இல்லையென்ற பயணிகளின் பெருங்குறையைப் போக்க, மேல் தளத்தில் இரண்டு குடும்பஅறைகளும் ஆறு ஒருவர் தங்கும் அறைகளும் கீழ்கட்டிடத்தில் தனி நபர் அறையில் குளியலறையும், கழிவு அறையும் இல்லை என்ற குறையும் போக்க குளியலறையும். கழிவு அறையும் கட்டப்பட்டன. இதற்காக ரூ. 55000— செலவாயிற்று. இதில் எல்லாவிதமான நவீன வசதிகளும் மேலும் ரூ, 15,000 செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் வசதிக்காக கட்டடத்தின் முன்புறத்தில் சைவ, அசைவ உணவு விடுதிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவை இரண்டும் வருகிற இரண்டாண்டுக்குள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த மேல் மாடிக் கட்டிடத்தை நகராட்சித் துணைத் தலைவர் திரு டி. இராஜகோபாலன் அவர்கள் தலைமையில், தலைவர் திரு க. தர்மராஜபிள்ளை அவர்களால் 1968-ம் ஆண்டு மே மாதம் 23-ம் நாள் திறந்து வைக்கப்பட்டது.

# கவனிக்கவும் -
# யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

*பாக்ட் கம்பெனியாரின்*
*உரத் தயாரிப்புகள்*

**பாக்டம்பாஸ்**
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

**அல்ட்ராபாஸ்**
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

**அமோனியம் ஸல்பேட்**

**சுபர்பாஸ்பேட்**

**N.P.K. கலப்பு உரங்கள்**

FACT

**பாக்ட்** ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A



**விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும் வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல.**

**விவசாயத்தின் மூலம் இடைக்கும் வருமானமும் போதுமானதல்ல.**

## கதரும் கிராமத் தொழில்களும்

**விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.**

- கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
- உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

## தென்காசி நகராட்சி

தென்காசி நகராட்சியில் துப்புரவு ஊழியர்களுக்கு இரண்டாவது கட்டமாக பன்னிரண்டு வீடுகள் ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து ஐநூற்றி ஐந்து செலவில் தமிழக அரசு மானியம் பெற்று 1968 மே மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## வேலூர் நகராட்சி

வேலூர் நகராட்சி, 1866-ம் ஆண்டு தொடங்கி, 1966-ஆம் ஆண்டு இப்போதைய மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பல முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நகராட்சி 37 தொடக்கப் பள்ளிகளை நடத்தி வருகிறது. மொத்தம் 230 ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள், நாள்தோறும் 2,000 பிள்ளைகளுக்கு மேல் மதிய உணவு அளிக்கப்பட்டு வருகிறது. தூய்மையான முறையில் அமைக்கப்பட்ட சமையல் அறையில உணவு தயாரித்து, "கேர்" நிறுவனத்தாரால் அளிக்கப்பட்ட 'எவர் சில்வர்' பாத்திரங்களிலும் மூன்று சக்கர டெம்போவான்களிலும், நாள் தோறும் உரிய காலத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் உணவு கொடுக்கப்பட்டு வரப்படுகிறது. இதுவன்றி "கேர்" நிறுவனத்தார் மதிய உணவு நிலையத்திற்கு காய்கறி பதார்த்தங்கள் தடங்கலின்றி கிடைப்பதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் தோட்டக் கருவிகளும், காய்கறி விதைகளும் உதவி உள்ளனர். தொடக்கக் கல்விக்கு, 1966-67 ஆம் ஆண்டு 4,28,538 1967-68-ல் 5,25,000 செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்நகராட்சி 74·7 கிலோ மீட்டர் நீள சாலைகளை அமைத்து 58, 7 கிலோ மீட்டர் நீள சாலைகளை தார் பாதை சிமெண்ட் சாலையாகவும் அமைத்து நல்ல நிலைமையில் பாதுகாக்கிறது.

மொத்தம் 2,941 விளக்குகள் உள்ளன. அவற்றில் 248 குழாய் விளக்குகள் 397, 100 வாட்டு விளக்குகளும் 86 பாதரச விளக்குகளும் குறிப்பிடத்தக்கன.

ஏற்கனவே உள்ள நேதாஜி அங்காடியின் மேற்கு பகுதியில், 16 லட்ச ரூபாய் செலவில் கடைகள் கட்டுவதற்காக அரசின் மேற்பார்வை பொறியாளரால் நடவடிக்கை எடுககப்பட்டு திட்டம் தொடங்கும் தருவாயில் உள்ளது.

**உயர்நிலைக் கல்வி:**—பெண்களுக்கென தனியாக ஒரு கல்வி நிலையமும், 4 உயர்நிலைப் பள்ளிகளுமாக 5 உயர்நிலைப் பள்ளிகள் ஆண்டு தோறும் 3,52,000 செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

## கோவில்பட்டி நகராட்சி

இந்நகராட்சியின் சீரணிப்படையினர் மூலம் கட்டிமுடிக்கவேண்டிய இரண்டு பள்ளிக்கூட வகுப்பறை வேலைகளுக்கு அரசினரால் வழங்கப்பட்ட ரூ. 2,400/-நிதியை இந்நகராட்சி பெற்று, கட்டிட வேலைகளுக்குரிய சாமான்கள் வாங்கப்பட்டன. ஒரு பள்ளிக்கூட வகுப்பு அறை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

நகராட்சி நாட் சந்தையில் ரூ. 36,000 மதிப்பீடுள்ள 18 கடைகள் கட்டுவதற்கான கட்டிட வேலைகள் துவக்கப்பட்டு வேலை நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

நகராட்சியின் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு, தமிழக அரசின் சிறு தொழில் துறை நிறுவனத்திலிருந்து ரூ. 14,763-05 விலைக்கு 9 பெட்டிக்கடைகள் வாங்கப்பட்டு நகரின் முக்கிய இடங்களில் நிறுவி மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 5,016 வருவாய் எதிர்பாக்கப்படுகிறது.

## இடைப்பாடி நகராட்சி

இடைப்பாடி நகராட்சியினரால் நகரச் சீரணிப் படையின் உதவிக் கொண்டு கட்டப்பட்ட ரூ. 12,000 மதிப்புள்ள ஒரு பள்ளிக் கட்டிடம் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களால், 1968 ஆண்டு ஜூன் மாதம் 7-ந்நாள் அன்று திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் இலவசமாக ஊர் பிரமுகர் ஒருவரால்கொடுக்கப்பட்டது. ஊர் மக்கள் கட்டிடம் கட்ட நன்கொடையாக ரூ. 1,000 வழங்கினர். அரசினர் மேற்கூரைக்கான சிமிண்ட் அட்டைகள் சாமான்களை, ரூ 4,000 மதிப்பில் வழங்கினர். நகராட்சி அதன் நிதியிலிருந்து மரம், செங்கல், சிமிண்ட் மற்ற சில சாமான்கள் வாங்கவும், முக்கிய மரவேலைகள், பூச்சு வேலை செய்ய கூலியாகவும், ரூ. 5,500 செலவு செய்துள்ளது, ரூ. 2,500 சீரணிப்படையினரின் உழைப்பின் காரணமாக மிச்சம் செய்யப்பட்டதாகும். மணல், செங்கல் மற்ற பொருள்களை லாரியில்கொண்டு வரவும் ஜல்லி உடைக்கவும் கட்டுவேலை செய்யவும் சீரணியின் உதவியில் ரூ. 2,500 மதிப்புள்ள வேலைகளும் பொருளும் இந்நகராட்சிக்கு சீரணிப் படையினரின் உழைப்பின் மூலம் கிடைத்தது. இக் கட்டிடம் 1968-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள்கட்ட ஆரம்பித்து, 12 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. சீரணிப்படையினரின் இச் சீரிய முயற்சியையும் பணியையும் அதை நன்கு பயன்படுத்திக்கொண்ட மாநகராட்சியையும் அமைச்சர் அவர்கள் ஊக்குவித்து இன்னும் பல அரிய பணிகளைச் செய்து முடிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

குழந்தைகள் பகுதி :




குட்டிக் குட்டிப் பூனையாம்!
குறும்பு செய்யும் பூனையாம்!
குட்டிக் கரணம் போடுமாம்!
குதித்துக் குதித்து ஓடுமாம்!
பாலைத் திருடிக் குடிக்குமாம்!
பக்குவ மாய் நடிக்குமாம்!
பந்தை விட்டு எறிந்ததும்
பாய்ந்து பிடித்துக் கொள்ளுமாம்!
சுண்டெ லியைக் கண்டதும்
சுறுசுறுப் பாய்ச் செல்லுமாம்!
'நண்டுப்' பிடி, போடுமாம்!
நன்றாய் கொன்று தின்னுமாம்!

முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை—24-ம் பக்கத் தொடர்ச்சி.

இதனை நன்கு உணர்ந்து, 'சுயராஜ்யம் என்பது சுக ராஜ்யமாகிறது' என்று மகிழ்ந்து கூறத் தக்க நிலைப் பெற்றிடப்பாடுபட வேண்டும்.

இந்த எல்லோரையும் கரம் கூப்பி அழைத்து—அணிகளாக அமைத்து—உடனிருந்து பணியாற்றுவதே அரசின் கடமை. அந்த அரசினை இன்று நடத்திச் சென்றிட அனுமதி பெற்றவன் என்ற முறையில் நாட்டினரே! நல்லோரே! உழவர்களே! உழைப்பாளிகளே! தொழில் வித்தகர்களே! விஞ்ஞானிகளே! அலுவலர்களே! ஆசிரியப் பெரியோர்களே! மாணவ நண்பர்காள்! உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

"விழா நாள் இன்று. விழிகளில் களிநடமிடும் நாள். கோலாகலமாகக் கொடி பறந்திடும் நாள். நாட்டுப் பண் எங்கும் கேட்டிடும் நாள், மகிழ்ச்சி பெறுவோம்—எழுச்சி பெறுவோம். ஆனால் அதேபோது கடமையைக் கவனத்தில் கொள்வோம்!

நாட்டிற்காக உழைப்போம்

எத்தனை கடுமையான உழைப்பு தேவை என்றாலும் 'நாட்டுக்காகத் தந்திடுவோம்' என்ற உறுதி கொள்வோம். குருதிக் கொட்டிப் பெற்ற சுதந்திரத்தின் பயனைப் பெற்றிட உழைப்போம் வாரீர் என்று அனைவரையும் அழைக்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி கண்ட நாடு. இனி, வளம் பெருக்கிட, வாழ்வுசிறந்திட, பசியையும் பஞ்சத்தையும் பற்றாக்குறையையும் போக்கிடப் போர் தொடுத்தாகவேண்டும்.

சமூகக் கொடுமைகளை வீழ்த்தி, மக்களுக்கு சமத்துவ வாழ்வு பெற்றளித்திடப் போர் நடத்தித் தீர வேண்டும். விழா தரும் மகிழ்ச்சி நமக்கெல்லாம் இதற்கான ஆற்றலைத் தந்திடும் என்று நம்புகிறேன்."

வணக்கம்.

—o—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வைக்கோல் மதிப்பு .. | 400 | 5. நடவு .. .. .. | 50 | 15 | சீரணித் தொண்டர்கள் செய்தல். 4 நாட்கள். |
| | 3,800 | 6. பயிர்ப் பாதுகாப்பு ... ... | 40 | 2 | சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். 2 நாட்கள். |
| | | 7. களை எடுத்தல் ... ... | 50 | 10 | சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். 4 நாட்கள். |
| | | 8. நீர் இறைத்தல் .. .. | 300 | | .... |
| | | 9. அறுவடை .. .. | 150 | 15 | சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். |
| | | மொத்தம் .. | 1,500 | | |
| | | சீரணித் தொண்டர்கள் மூலம் செய்த செலவுகள். | 380 | | |
| | | நிகர செலவு .. | 2,120 | | |
| | | நிகர லாபம் .. | 2,680 | | |

**காய்கறி உற்பத்தி**

242 மாணவர்களுக்கு உணவிற்கு ஒரு நாளுக்கு தேவைப்படும் காய்கறிகள் :—

| | |
|---|---|
| தக்காளி .. .. | 5 கிலோ |
| கத்தரி .. .. .. | 8 ,, |
| மிளகாய் .. .. | 1 ,, |
| வெண்டை .. .. | 5 ,, |

இந்த காய்கறி சாகுபடிக்கான நிலத்தை பண் படுத்துதல், விதைத்தல், முதலிய வேலைகளை ஆசிரியர்களின் துணை கொண்டு மாணவர்களால் செயல்படுத்தப்படுபவை.

0·25 சென்ட் தக்காளியும், 0·50 சென்டில் கத்தரி, வெண்டை, புடல், பாகல், பீர்கன் முதலியவைகள் வைத்தல். 0·25 சென்டில் பூசனி, பரங்கி, முருங்கை, கருவேப்பிலை வைத்தல். துவக்க நிலையில் 100 தென்னங் கன்றுகள் நடலாம். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கன்றுகள் வளர்ச்சி பெற்று பலன்தரும் கட்டத்தில் சுமார் ரூ. 2,000 வருமானம் கிடைக்க நியாயமுண்டு.

## வருமானம்

| | ரூபாய். |
|---|---|
| 1 நெல் முதல் போகம் .. .. .. ... ... .. | 2,980 |
| 2 இரண்டாம், மூன்றும் போகம் .. .. .. .. .. | 5,360 |
| 3 காய்கறி மூலம் கிடைக்கும் வருமானம் .. .. .. .. | 500 |
| 4 தென்னை மூலம் சுமார் வரவு .. .. ... ... .. | 2,000 |
| மொத்தம் .. | 10,840 |

| | |
|---|---|
| 1 வெள்ளரிவெள்ளி ஊராட்சி எல்லையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை. .. | 9 |
| 2 மதிய உணவு பெறும் மாணவ, மாணவிகள் .. .. .. | 248 |
| 3 நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு 6 பைசா வீதம் .. .. | 14—88 |
| 4 நாளொன்றுக்கு 4 பைசா வீதம் .. .. .. .. .. | 9—92 |
| 5 ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 பைசா வீதம் ... .. | 24—80 |
| 6 ஆண்டு ஒன்றில் உணவு வழங்கப்படும் நாட்கள் .. ... .. | 200 |
| 7 ஓர் ஆண்டிற்கு ஆகும் மொத்த செலவு — — — — | ரூ. 4,960 |
| 8 நிகர லாபம் (10,480—4,960) .. — .. — ... | ரூ. 5,880 |

சத்துணவு கொடுப்பதற்கு ஏதுவாக ஏற்கெனவே பள்ளியில் 27 கோழிகளைக்கொண்ட பண்ணையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மேலும் அதிகப்படியான முட்டைகள் மாணவர்களுக்கு வழங்க இயலும்.

இந்த மையம் சரியான முறையில் செயல்படத் துவங்கும்பொழுது மேற்கொண்டு இந்தப் பள்ளிகளில் பயிலும் 500 மாணவர்களுக்கும் 0-50 பைசா மதிப்புள்ள மதிய உணவு வழங்க முடியும். இன்னும் 2 ஆண்டிற்குள் அரசாங்க ஊராட்சி மான்யங்கள் பெறுமல் இயங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற திட்டங்கள் இருப்பாளி, குண்டுமலைக்காடு, செட்டிமாங்குறிச்சி ஆகிய ஊராட்சிகளிலும் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றது.

| வரிசை எண்ணும், மையத்தின் பெயரும். | பள்ளி பெயர். | தூரம். | பள்ளியில் படிப்பவர்கள். | மதிய உணவு பெறுபவர்கள். | மொத்த செலவு. | மதிய உணவிற்கு சாகுபடி நிலம். | பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | மை. பர். | | | ரூ. ச. | நெ. | ஏ. செ. |
| 1 செட்டிமாங்குறிச்சி .. | 1. செட்டிமாங்குறிச்சி. | .. | 131 | 40 | 800 | 190/2 | 5-31 |
| | 2. சவுரிபாளையம் .. | 1—6 | 81 | 40 | 800 | .. | .. |
| | 3. கொத்தாபாளையம். | 2—2 | 107 | 55 | 1,100 | 200/2 | 1—3 |
| 2 குண்டுமலைக்காடு .. | 1. அடுவார்ப்பட்டி .. | 1—0 | 116 | 25 | 500 | 279 | .. |
| | 2. குண்டுமலைக்காடு. | .. | 67 | 25 | 500 | 279 | 8—82 |
| | 3. பக்கநாடு .. | 1—0 | 131 | 60 | 1,200 | 279 | .. |
| 3 இருப்பாளி .. .. | 1. அம்மாசியூர் .. | 2—3 | 100 | 25 | 500 | .. | .. |
| | 2. இருப்பாளி .. | .. | 134 | 60 | 1,200 | .. | .. |
| | 3. காட்டுவளவு .. | 1—0 | 139 | 60 | 1,200 | 122/1 | 4—09 |
| | 4. குருக்கள்பட்டி .. | 2—4 | 172 | 40 | 800 | 122/2 | 4—42 |
| | 5. மேலகரைப்பட்டி .. | 1—0 | 50 | 25 | 500 | .. | .. |
| | 6. ராமகவுண்டனூர். | 2—0 | 170 | 40 | 800 | .. | .. |
| | 7. செவிடனூர் .. | 2—6 | 80 | 40 | 800 | .. | .. |

மேற்கண்ட இடங்களில் நிலம் சீர்படுத்தப்பட்டு வருகின்றன. தோட்டத்தைப் பராமரிக்கவும், உணவை எடுத்துச் செல்லவும், தோட்டக்காவலர் ஒருவரை நியமனம் செய்யவும், பள்ளி ஆயாவைச் சமையல் வேலைகளைக் கவனிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சித்தூர், கோனேரிப்பட்டி ஆகிய ஊர்களில் ஆரம்ப வேலை துவக்கப்பட்டுள்ளது. 49 ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் இனி 11 ஊராட்சிகளுக்கும், 11 சமையல் கூடங்கள் மட்டுமே செயல்படும். மதிய உணவு தணிக்கைகள் 11 மையங்களில் மட்டுமே செய்யப்படும். எல்லா மையங்களிலும் திட்டம் முழுமையாக செயல்படும்போது, அரசு, ஊராட்சி மான்யங்கள் ஏதுமின்றி சுயமாக சிறப்பாக செயல்பட முடியும். சத்துள்ள உணவுவகை வேண்டிய மட்டும் வழங்க நிச்சயமாக இத் திட்டம் உறுதுணை புரியும்.

---

## ' கிராமநலம் ' சிறப்பு வெளியீடு

**தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பெயர்கள் அடங்கிய மாவட்டவாரியான சிறப்பு வெளியீடு ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிச்சியுடன் தெரிவிததுக்கொள்கிறோம். அவ்வெளியீட்டில் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் பொறுப்பேற்று நற்பணியாற்றிவரும் தலைவர்களின் பெயர்களுடன் தமிழக சட்டப்பேரவை, சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்களின் பெயர்களும். தன்னகத்தே கொண்டு விரைவில் வெளிவரும் ' கிராமநலம் ' இதழிற்கு ஆண்டு சந்தா அனுப்பியுள்ள அனைவருக்கும் இச்சிறப்பிதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். தனிப் பிரதி விலை ரூபாய் ஒன்று.**

**இச் சிறப்புவெளியீடு வெளிவரும் மாதம், அதற்கான பணம் அனுப்ப வேண்டிய விவரங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். அது வரையில் சிறப்பு வெளியீடு கேட்டு பணம் அனுப்ப வேண்டா மெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

கிராம நலம் பகுதி - 2
GRAMANALAM PART - 2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

## "கிராமநலம்"--ஊராட்சி நிறுவனங்கள் சந்தா செலுத்துதல்.

## "GRAMANALAM"—Supply to Panchayat institutions—Payment of subscription—Procedure—intimated.

ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஊராட்சி நிறுவனங்களுக்கு, "கிராமநலம்" சந்தா தொகைகளை கீழ் கொடுத்திருக்கும் முறைப்படி செலுத்தவேண்டும் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அவர்கள் கிராம வளர்ச்சி இயக்குநரின் 21—3—1967 நாளிட்ட குறிப்பாணையில் தங்கள் கவனத்தைச் செலுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், "கிராமநலம்" திங்கள் இதழுக்கு ஆண்டுச் சந்தாவான ரூபாய் இரண்டை மொத்தமாக கருவூலத்தில் ("L II Miscellaneous m miscellaneous") என்ற தலைப்பின்கீழ் முன்பணமாக செலுத்த வேண்டும். ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், சமூகக் கல்வி நிலையங்கள், மகளிர் மன்றங்கள், ஊராட்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படவேண்டிய "கிராம நல"த்தின் மொத்த நகல்களின் எண்ணிக்கையை கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அறிவிக்கும்போது, சந்தா செலுத்திய விவரங்களுக்கு செலுத்துச் சீட்டின் உண்மை நகல் ஒன்றும் சேர்த்து வைத்து அனுப்பப்படவேண்டும்.

2. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வங்கி சீட்டாகவோ (Bank Drafts), வங்கிகளின் பத்திரங்களாகவோ (Demand Drafts) அல்லது தபால் மூலமாகவோ பணமோ, "கிராமநலம்" சந்தாவிற்காக கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பக்கூடாது.

3. "கிராமநலம்" இதழ்களை அனுப்புவதில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்கும், அவை பத்திரமாக போய்ச் சேருவதை உறுதிப்படுத்துவதற்காகவும் தமிழக அச்சு, எழுதுபொருள் இயக்குநர் "கிராமநலம்" இதழ்களை மொத்தமாக பதிவு அஞ்சலில் அனுப்பிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஊராட்சி நிறுவனங்களுக்கு "கிராமநலம்" பிரதிகளை தனித்தனியாக விநியோகிக்க வேண்டும் என்ற ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் கோரிக்கை ஏற்கக்கூடியதன்று.

4. "கிராமநலம்" இதழ்களை மொத்தமாக விநியோகிப்பதற்கு உதவும்பொருட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பணம் செலுத்தும்போது தங்களின் மொத்தத் தேவையை சேர்த்து அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அச்சு, எழுது பொருள் இயக்குநரிடமிருந்து, சந்தா செலுத்தியதற்கு உரிய "கிராம நலம்" இதழ் கிடைக்கப்பெற்றவுடன், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் சந்தா செலுத்திய ஊராட்சி நிறுவனங்களுக்கு "கிராம நலம்" பிரதிகளை விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5. பலருடைய சந்தாக்கள் அவ்வப்போது புதிப்பிக்கப்படாததனால், அவர்களுக்கு "கிராமநலம்" பிரதிகளின் விநியோகத்தை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. "கிராம நலம்" பிரதிகளின் விநியோகத்தில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கு, பழைய சந்தாக்களை உரிய காலத்தில் புதுப்பிக்கும்படியும், புதிய சந்தாத் தொகைகளை மொத்தமாக முன் பணமாகவே அனுப்பிவைக்கும்படியும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேற்குறிப்பிட்டுள்ள பத்தி 1-ல் உள்ளவாறு செலுத்துச் சீட்டின் உண்மை நகலோடு (Attested Copy of the Chalan) கீழ்க்காணும் இணைப்பு விவரங்களும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

"கிராமநலம்" பிரதிகளை மொத்தமாக விநியோகிப்பதற்குரிய விண்ணப்ப விவரம்.

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்

மாவட்டம்.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளுக்கு சந்தாச் செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

சமூகக் கல்வி நிலையங்களுக்கு சந்தாச் செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

மகளிர் மன்றங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராம நலம்" இதழ்கள்.

ஊராட்சி மன்றங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராம நலம்" இதழ்கள்.

ஊராட்சிகளின் மற்ற நிறுவனங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

கருவூலச் செலுத்துச் சீட்டில் உண்மை நகலின்படி, சந்தா செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கையொப்பம்:

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 18-3-1968 நாளிட்ட குறிப்பாணை எண் 49610-ன் சுருக்கம்.)

---

## நகராட்சிகட்டிடங்களில் சிலைகள்-உருவப் படங்கள் அமைத்தல்-ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Statues and portraits—Installation in municipal premises—Maintenance charges—Collection of—Orders—Issued.

உள்ளாட்சி நிறுவனங்களில் சிறந்த சேவை செய்துள்ள பெருந்தலைவர், தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியவர்களை சிறப்பிப்பதற்காக அவர்களுடைய உள்ளாட்சி நிறுவனக் கட்டிடங்களில் உருவப்படங்கள் ஏற்படுத்துவது. தனிப்பட்டவர்கள் நிதி உதவியிலிருந்து சரிக்கட்ட வேண்டும் என்று கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1953-ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 17-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்திய தேசியத் தலைவர்களின் உருவப்படங்களை ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவுகளை தனிப்பட்டவர்கள் நிதி உதவியில் இருந்து சரிகட்டுவதாக இருந்தால், உருவப்படம் ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதியளிக்கும்.

2. ஏற்கனவே நிறுவப்பட்ட உருவப் படங்களுக்கு பேணுதல் செலவு, மறுபடி வர்ணம் தீட்டுதல் ஆகிய செலவுகளை நகராட்சி நிதியிலிருந்து செய்யவேண்டும் என்ற கோரிக்கை தற்போது அரசிற்கு வந்திருக்கிறது. உருவப்படம் ஏற்படுத்த இணங்குவதற்கு முன்னால் வசூலிக்கப்பட்ட தனி நபர்கள் நிதி பற்றியும் வருங்காலத்தில், நியாயமான பேணுதல் செலவு பற்றிய திட்டவரையறை செய்யவேண்டுமென அரசு கருதுகிறது.

3. உருவப்படங்கள், சிலைகள் ஆகியவைகள் வைப்பதற்கு ஒப்புக்கொள்ளும்போது பேணுதல் செலவுகளுக்காக சிலைகளுக்கு செலவாகும் தொகையில் 20 சத வீதமும் உருவப்படமானால் அதற்கு சமமான தொகையையும் வசூலிக்கவேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968-ஆம் ஆண்டு மார்ச் 27-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 623-ன் சுருக்கம்.)

---

## ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகைக் கணக்கு

சென்ற இதழ் தொடர்ச்சி.

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **கன்னியாகுமரி** | |
| 1 | அகஸ்தீஸ்வரம் | 85,853 |
| 2 | முன்சிறை | 108,464 |
| 3 | இள்வியூர் | 93,520 |
| 4 | மேல்புரம் | 101,859 |
| 5 | இராஜாக்கமங்கலம் | 84,545 |
| 6 | குருத்தங்கோடு | 109,672 |
| 7 | தோவாளை | 62,292 |
| 8 | திருவட்டார் | 91,066 |
| 9 | தக்கலே | 109,565 |
| | | 846,,836 |
| | **நிலகிரி** | |
| 1 | உதகமண்டலம் | 116,033 |
| 2 | கூனூர் | 73,884 |
| 3 | கோட்டகிரி | 53,846 |
| 4 | கூடலூர் | 69,522 |
| | | 313,285 |
| | **மதுரை (கிழக்கு)** | |
| 1 | வாடிப்பட்டி | 65,174 |
| 2 | அலங்காநல்லூர் | 68,558 |
| 3 | மதுரை (கிழக்கு) | 59,191 |
| 4 | மேலூர் (வடக்கு) | 69,315 |
| 5 | மதுரை (மேற்கு) | 64,102 |
| 6 | மேலூர் (தெற்கு) | 93,933 |
| 7 | உசிலம்பட்டி | 68,110 |
| 8 | செல்லம்பட்டி | 65,334 |
| 9 | திருமங்கலம் | 75,322 |
| 10 | கள்ளிக்குடி | 54,392 |
| 11 | டி. கல்லுப்பட்டி | 63,727 |
| 12 | சேடப்பட்டி | 83,797 |
| 13 | திருப்பரங்குன்றம் | 1,22,547 |
| 14 | நத்தம் | 79,272 |
| 15 | வத்தலக்குண்டு | 63,555 |
| 16 | நிலக்கோட்டை | 93,719 |
| | | ,1,190,048 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **மதுரை (மேற்கு)** | |
| 1 | ஆத்தூர் | 1,06,668 |
| 2 | ரெட்டியார்சத்திரம் | 81,765 |
| 3 | திண்டுக்கல் | 66.832 |
| 4 | பழனி | 75,989 |
| 5 | போடிநாயக்கனூர் | 59,051 |
| 6 | ஆண்டிப்பட்டி | 1,03,745 |
| 7 | கொடைக்கானல் | 39,858 |
| 8 | வேடசந்தூர் | 66,827 |
| 9 | கம்பம் | 65,601 |
| 10 | பெரியகுளம் | 82,628 |
| 11 | தேனி | 49,265 |
| 12 | சின்னமனூர் | 73,971 |
| 13 | சாணார்பட்டி | 69.386 |
| 14 | வட மதுரை | 57,116 |
| 15 | ஒட்டன் சத்திரம் | 81,868 |
| 16 | தொப்பம்பட்டி | 89,042 |
| 17 | பாளையம் | 61,006 |
| 18 | உத்தமபாளையம் | 80,661 |
| | | 1,311,279 |
| | **இராமநாதபுரம் (கிழக்கு)** | |
| 1 | சிங்கம்புணரி | 72,120 |
| 2 | காளையார்கோயில் | 70,486 |
| 3 | திருவாடானை | 44,890 |
| 4 | தேவக்கோட்டை | 49,909 |
| 5 | கமுதி | 89,489 |
| 6 | கல்லல் | 66,010 |
| 7 | மானாமதுரை | 67,629 |
| 8 | கடலாடி | 85,527 |
| 9 | முதுகுளத்தூர் | 59.107 |
| 10 | பரமக்குடி | 48,062 |
| 11 | மண்டபம் | 68,887 |
| 12 | கன்னங்குடி | 43,707 |
| 13 | இராஜசிங்கமங்கலம் | 51,786 |
| 14 | இராமநாதபுரம் | 33,623 |
| 15 | போகலூர் | 70,945 |
| 16 | சாக்கோட்டை | 62,918 |
| 17 | திருப்புவனம் | 66,885 |
| 18 | திருப்புல்லாணி | 62,004 |
| 19 | திருப்பத்தூர் | 68,349 |
| 20 | சிவகங்கை | 74,632 |
| 21 | இளையாங்குடி | 75,449 |
| | | 1332,414 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **இராமநாதபுரம் (மேற்கு)** | |
| 1 | சிவகாசி | 68,460 |
| 2 | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 61,322 |
| 3 | வத்திராயிருப்பு | 77,914 |
| 4 | ராஜபாளையம் | 92,838 |
| 5 | விருதுநகர் | 71,856 |
| 6 | காரியாபட்டி | 57,384 |
| 7 | சாத்தூர் | 67,071 |
| 8 | வெம்பக்கோட்டை | 60,948 |
| 9 | நரிக்குடி | 53,867 |
| 10 | அருப்புக்கோட்டை | 52,920 |
| 11 | திருச்சுழி | 55,678 |
| | | 7,20,258 |
| | **சேலம் (வடக்கு)** | |
| 1 | கங்கவல்லி | 68,674 |
| 2 | தலைவாசல் | 66,991 |
| 3 | பெத்தநாயக்கன்பாளையம் | 72,462 |
| 4 | ஆத்தூர் | 59,366 |
| 5 | குளத்தூர் | 44,214 |
| 6 | மேச்சேரி | 63,066 |
| 7 | நங்கவள்ளி | 68,276 |
| 8 | வாழப்பாடி | 61,234 |
| 9 | வீரபாண்டி | 76,980 |
| 10 | ஓமலூர் | 95,209 |
| 11 | தாராமங்கலம் | 57,246 |
| 12 | சேலம் | 89,045 |
| 13 | காரிப்பட்டி | 80,018 |
| 14 | பனமரத்துப்பட்டி | 60,191 |
| 15 | காடயாம்பட்டி | 69,346 |
| 16 | ஏர்க்காடு | 23,753 |
| | | 10,56,101 |
| | **சேலம் (தெற்கு)** | |
| 1 | நாமகிரிப்பேட்டை | 62,134 |
| 2 | இடைப்பாடி | 52,013 |
| 3 | பரமத்தி | 54,905 |
| 4 | திருச்செங்கோடு | 58,348 |
| 5 | சேந்தமங்கலம் | 54,178 |
| 6 | மோகனூர் | 58,805 |
| 7 | சங்ககிரி | 74,787 |
| 8 | கபிலமலை | 55,811 |
| 9 | பள்ளிப்பாளையம் | 60,631 |
| 10 | நாமக்கல் | 72,043 |
| 11 | மல்ல சமுத்திரம் | 52,055 |
| 12 | எருமைப்பட்டி | 56,060 |
| 13 | வெண்ணந்தூர் | 55,274 |
| 14 | எலச்சிபாளையம் | 54,247 |
| 15 | கொங்கணபுரம் | 41,129 |
| 16 | மகுடஞ்சாவடி | 50,016 |
| 17 | புதுச்சத்திரம் | 55,546 |
| 18 | ராசிபுரம் | 51,270 |
| 19 | கொல்லிமலை (ஆதிவாசிகள் வளர்ச்சி) | 21,020 |
| | | 1,040,272 |
| | **தஞ்சாவூர் (கிழக்கு)** | |
| 1 | திருத்துறைப்பூண்டி | 65,137 |
| 2 | தலைஞாயிறு | 45,320 |
| 3 | வேதாரண்யம் | 1,02,319 |
| 4 | கொள்ளிடம் | 85,578 |
| 5 | சீர்காழி | 1,00,200 |
| 6 | மாயூரம் | 96,898 |
| 7 | செம்பனார்கோயில் | 1,26,214 |
| 8 | குத்தாலம் | 89,554 |
| 9 | முத்துப்பேட்டை | 62,046 |
| 10 | நாகப்பட்டினம் | 92,249 |
| 11 | கீவளூர் | 49,416 |
| 12 | குடவாசல் | 70,216 |
| 13 | கோட்டூர் | 70,740 |
| 14 | கொரடாச்சேரி | 63,665 |
| 15 | திருமருகல் | 59,660 |
| 16 | நன்னிலம் | 73,476 |
| 17 | நீடாமங்கலம் | 76,815 |
| 18 | மன்னார்குடி | 90,715 |
| 19 | திருவாரூர் | 48,444 |
| | | 1,468.662 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **தஞ்சாவூர் (மேற்கு)** | |
| 1 | அம்மாபேட்டை | 76,962 |
| 2 | வலங்கைமான் | 63,098 |
| 3 | திருப்பனந்தாள் | 69,327 |
| 4 | திருவிடைமருதூர் | 113,234 |
| 5 | கும்பகோணம் | 92,726 |
| 6 | பாபநாசம் | 92,841 |
| 7 | ஒரத்தநாடு | 113,621 |
| 8 | பட்டுக்கோட்டை | 81,496 |
| 9 | ஆவுடையார்கோவில் | 58,349 |
| 10 | பூதலூர் | 66,372 |
| 11 | சேதுபாவாசத்திரம் | 54,415 |
| 12 | திருவையாறு | 85,493 |
| 13 | திருவோணம் | 80,535 |
| 14 | பேராவூரணி | 74,587 |
| 15 | தஞ்சாவூர் | 98,686 |
| 16 | மதுக்கூர் | 55,348 |
| 17 | அறந்தாங்கி | 97,619 |
| | | 1,374,709 |
| | **திருச்சிராப்பள்ளி (வடக்கு)** | |
| 1 | தாத்தையங்கார்பேட்டை | 68,680 |
| 2 | முசிறி | 77,148 |
| 3 | வேப்பந்தட்டை | 75,892 |
| 4 | தொட்டியம் | 86,941 |
| 5 | துறையூர் | 85,335 |
| 6 | பெரம்பலூர் | 64,828 |
| 7 | திருமானூர் | 76,390 |
| 8 | லால்குடி | 97,123 |
| 9 | அரியலூர் | 71,196 |
| 10 | உப்பிலியாபுரம் | 64.616 |
| 11 | மணிகண்டம் | 50,025 |
| 12 | ஆண்டிமடம் | 70,342 |
| 13 | டி. பாலூர் | 65,556 |
| 14 | புல்லம்பாடி | '73,446 |
| 15 | ஜெயங்கொண்டம் | 90,719 |
| 16 | மணச்சநல்லூர் | 95,663 |
| 17 | ஆலத்தூர் | 63,774 |
| 18 | வேப்பூர் | 82,245 |
| 19 | செந்துறை | 63,489 |
| 20 | திருவரம்பூர் | 83,736 |
| 21 | அந்தநல்லூர் | 57,244 |
| | | 1,564,388 |
| | **திருச்சிராப்பள்ளி (தெற்கு)** | |
| 1 | கே. பரமத்தி | 79,330 |
| 2 | திருவரங்குளம் | 89,830 |
| 3 | அரவக்குறிச்சி | 65,096 |
| 4 | குளித்தலை | 108,980 |
| 5 | தாந்தோணி | 74,167 |
| 6 | கரம்பக்குடி | 50,161 |
| 7 | கீரனூர் | 45,757 |
| 8 | வையம்பட்டி | 57,498 |
| 9 | அரிமழம் | 49,831 |
| 10 | கடவூர் | 62,221 |
| 11 | மருங்காபுரி | 62,748 |
| 12 | அன்னவாசல் | 62,719 |
| 13 | பொன்னமராவதி | 62,234 |
| 14 | கரூர் | 76,005 |
| 15 | விராலிமலை | 60,824 |
| 16 | மணப்பாறை | 47,412 |
| 17 | கிருஷ்ணராயபுரம் | 82,388 |
| 18 | திருமயம் | 50,594 |
| | | 1,187,795 |
| | **திருநெல்வேலி (வடக்கு)** | |
| 1 | சங்கரன்கோயில் | 60,582 |
| 2 | மேலநீலிதநல்லூர் | 54,541 |
| 3 | குருவிகுளம் | 77,677 |
| 4 | கோவில்பட்டி | 69,610 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| 5 | கருங்குளம் | 63,773 |
| 6 | தூத்துக்குடி | 51,363 |
| 7 | சாத்தாங்குளம் | 70,276 |
| 8 | வாசுதேவநல்லூர் | 88,350 |
| 9 | ஓட்டப்பிடாரம் | 92,872 |
| 10 | உடன்குடி | .60,714 |
| 11 | புதூர் | 62,878 |
| 12 | திருச்செந்தூர் | 70,501 |
| 13 | விளாத்திகுளம் | 72,344 |
| 14 | ஸ்ரீவைகுண்டம் | 91,654 |
| 15 | ஆழ்வார் திருநகரி | 90,100 |
| 16 | கயத்தாறு | 82,061 |
| | | 1,159,316 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **திருநெல்வேலி (தெற்கு)** | |
| 1 | சேரன்மாதேவி | 83,730 |
| 2 | பாப்பாகுடி | 49,505 |
| 3 | வள்ளியூர் | 92,672 |
| 4 | மானூர் | 73,942 |
| 5 | ஆலங்குளம் | 66,596 |
| 6 | ராதாபுரம் | 78,610 |
| 7 | செங்கோட்டை | 45,945 |
| 8 | தென்காசி | 61,631 |
| 9 | கீழப்பாவூர் | 89,562 |
| 10 | கடயம் | 66,479 |
| 11 | நாங்குநேரி | 83,797 |
| 12 | பாளையங்கோட்டை | 86,277 |
| 13 | கடையநல்லூர் | 42,129 |
| 14 | களக்காடு | 69,927 |
| 15 | அம்பாசமுத்திரம் | 93,568 |
| | | 1,064,370 |

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 10—2—1968 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 3514-ன் சுருக்கம்.)

## இந்த இதழில்...


பக்கம்

1. உள்ளாட்சி அமைச்சரின் பாராட்டுப் பா .. 1
2. முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை (15—8—68) .. .. .. 2
3. காந்தியடிகள் நூற்றாண்டு விழா—கல்வி அமைச்சரின் கடிதம் (12—7—68) .. 5
4. சொல்லேர் உழவர் கவியரங்கம் .. 7
5. அனந்தலை—தமிழகத்தின் இரண்டாவது சிறந்த கிராமம் .. .. .. 9
6. திரு வ. சுவாமிநாதன்—முதற் பரிசு பெற்ற ஊர்ப்பணியாளர் .. .. 12
7. வெற்றி மாளிகையின் வாயிலிலே .. 15
8. வெள்ளரி வெள்ளி—தனிச் சிறப்பு .. 29


## அடுத்த இதழில்...

1. புதிய பாதை (கவியரங்கம்)— மாண்புமிகு பொதுப்பணி அமைச்சரின் தலைமையுரை (கவிதை வடிவில்)
2. வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சிப் பணிகள் (மாண்புமிகு உள்ளாட்சித் துறை.அமைச்சர்)
3. அண்ணா பிறந்த நாள் பெருமங்கல வாழ்த்து— பேராசிரியர் இலக்குவனார்.
4. கிராமங்கள் தோறும் மகளிர் மன்றம்
5. கூட்டுறவு மூலம் விவசாயக்கடன் பெறுவது எப்படி ?
6. ஆட்சி மொழி-பயிற்சி மொழி-ஒரு விளக்கம்
7. தமிழகத்தின் இரண்டாவது சிறந்த ஊர்ப்பணியாளர் திரு அய்யம்பெருமாள் (தர்மபுரி மாவட்டம்).


ஆசிரியக குழுத் தலைவர் :

திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ.; ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9 Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

# Slanes

## ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்
## "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HB1-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்)—மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

தந்தி : "கோல்டுஸீட்"

போன் : 30442

## கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

## டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |